சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியர் வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீச ௵ கார்த்திகை ௴ 1913 ௵ நவம்பர் ௴ | ஸஞ்சிகை 7. No. 7

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. 5 JAN 1914

H. E. THE VICEROY.

மேன்மைதங்கிய வைசிராய்.

———

நம் மேன்மைதங்கிய வைசிராய் ஹார்டிஞ்சுபிரபுவும் அவருடைய உத்தம பத்தினியாகிய ஹார்டிஞ்சு பெருமாட்டியும் இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். சென்டரல் ஸ்டேஷனில் வந்திறங்கினவுடன், அவர்களை எதிர்கொண்டு அழைத்து உபசரிப்பதற்காக போயிருந்த கனம்மிக்க கவர்னர் முதலானவர்களுடன் சிறிது நிமிஷம் பேசிவிட்டு மவுண்ட் ரோட்டிலிருக்கும் கவர்ன்மெண்ட் அவுஸுக்குச் சென்றனர். அவ்விடம் பேட்டிகண்டுகொள்வதற்காக வந்திருந்த நியமனங்களும் கூட்டத் தார்களும் அட்டிரஸ் வாசித்தார்கள். அடியிற்கண்ட வரவேற்பு பத்திரம் தென்னிந்திய சேம்பர் ஆப் காமெர்ஸ என்னும் வர்தக ஆலோசனை சபையாரால் வாசிக்கப் பட்டு சித்திர வேலைப்பாடு செய்யப் பட்டுள்ள நேர்த்தியான வெள்ளிப் பெட்டியில் அடக்கம் செய்து கொடுக்கப்பட்டது.

வர்த்தக ஆலோசனை ஸபையின் அட்ரேஸ்.

இந்த ராஜதானியின் வர்த்தக வகுப்பாருடைய தாபில் மேன்மைதங்கியதங்களுக்கும் மேன்மை தங்கியஹார்டிஞ்சுபெருமாட்டிக்கும் எங்களுடையமனப்பூர்வமான நல்வரவு கூற அனுமதி தந்தருள வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

மேன்மை தங்கிய தங்களிருவரையும் திரும்பவும் கண்டு நாங்கள் அகமகிழும் படியான பாக்கியத்தை சர்வ வல்லமையுள்ள கடவுள் எங்களுக்கு அனுக்கிரகித்திருப்பதை நினைக்க, மிக்க சந்தோஷமாயிருக்கிறது. மகா விபரீதமானவும், மாகா கஷ்டமுமான சந்தர்ப்பங்களில் மேன்மை தங்கிய தாங்கள் காட்டிய சிறந்த தைரியத்தையும் அனுதாபத்தையும் சிலாகித்துக் கொள்ளும் உலகினருள் நாங்களும் சேர்ந்திருக்கிறோம்.

மேன்மை தங்கிய தங்களுடைய பரிபாலனத்தில் உண்டாயிருக்கும் நன்மைகளை விவரித்துச் சொல்ல சமயம் இதுவல்ல. ஆயினும் இவ் விசாலமான தேசத்தில் கோடிக்கணக்கான ஜனங்களுடைய பல் வேறுபட்ட விவகாரங்களில் மேன்மை பொருந்திய தங்களது செல்வாக்கை உபயோகப்படுத்தி செய்திருக்கும் நன்மைகளுக்காக தேசத்திலுள்ள ஏனையர்கள்போல் நாங்களும் மேன்மைபொருந்

திய தங்களால் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

சென்னை கவர்ன்மெண்டாருடையவும், இந்தியா கவர்ன்மெண்டாருடையவும் சமயோசிதமானவும் தாராளமானவுமான உதவியைக்கொண்டு துறைமுகத்தில் அநேக வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது நடந்துவருகிற வேலைகளும், இனிமேல் நடக்கப்போகும் வேலைகளும் முடிந்துபோகுமாயின் விசேஷ நன்மைகளை பயக்கும் சென்னை வியாபாரத்திற்காக நாளது வரையில் கண்டுபிடிக்கப்பட்ட வசதிகள் அமையப்பெற்ற ஒரு துறைமுகம் எங்களுக்கு கிடைக்குமென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

இச்சென்னை மாகாணத்தை மற்ற மகாணங்களுடன் சீர்தூக்கிப் பார்க்குங்கால் பொருளாதார சுபிக்ஷத்திற்கு அனுகூலமாயுள்ள இயற்கை சாதனங்களை பலப்படுத்திக்கொள்வதில் இந்த ராஜதானி மெதுவாயிருக்கிறதென்பது மேன்மைதங்கியதங்களுக்கு சந்தேகமறத் தெரிந்தவிஷயமே. எங்களுடைய கைத்தொழில்களை விஸ்தரிக்கவும், அபிவிருத்தி செய்வதற்கும், செயற்கைபொருள்களையும் விவசாயத்தையும் வியாபார முற்போக்கையும் பலப்படுடுத்துவதற்கும் சமயம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவைகள் சம்பந்தமான முக்கிய பிரஸ்னைகள் தங்களுடையமேன்மைபொருந்திய கவர்ன்மெண்டின் ஆலோசனைக்கு வரும்போது மேன்மை தங்கிய தங்களுடைய பரிபாலனத்தைச் சிறந்து விளங்கும்படியாகச் செய்யும் அனுதாப ஆதரிப்பை பெறுமென்று நாங்கள் உண்மையில் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

மேன்மை பொருந்திய தங்களிருவருக்கும் தீர்க்காயுசையும் தேக சௌக்கியத்தையும் செல்வத்தையும் தந்தருள வேண்டுமென்று கடவுளை பிரார்த்திக்கிறோம்.

THE PROVIDENT INSURANCE SOCIETIES ACT.

பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் சங்கங்கள் ஆக்ட்.

பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ சங்கங்கள் பாஸ் செய்விக்கப்பட்டு 1912ம் வருடம் மார்ச்சு மீ 18ல் ஊர்ச்சிதத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 1912ம் வருடம் எப்ரல் மீ 12வயில் இந்தியன் கம்பெனிகள் ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர்செய்யப்பட்ட 123 சங்கங்களிருந்தன. இந்த சங்கங்களுக்குள் நான்கு, புதிய சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. ரிப்போர்ட் காலத்தில் ரிஜிஸ்டர் செய்யப் படுவதற்காக அனுப்பப்பட்ட 11 சங்கங்களின் மனுக்கள் பைசல் செய்யப்படாமலிருந்தன. பாக்கி சங்கங்கள் எல்லாம் மறைந்து போய்விட்டன. இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முந்தி 18 சங்கங்களிருந்தன. ஆனால் இவைகள் எல்லாம் இந்தியன் கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்படாதவை. இவைகளில் நான்கு, புதிய சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. வேறுஇரண்டு சங்கங்கள் செய்துகொண்ட மனுக்கள் ரிப்போர்ட்காலத்தில் பைசல் செய்யப்படாமலிருந்தன. பென்ஷன் கொடுப்பதற்காகவும் தருமபணவசூலைக்கொண்டும் மிஷன்கள் கொடுக்கும் உபகாரப் பணத்தைக் கொண்டு உதவி செய்யும் நோக்கத்தைக் கொண்ட 9 சங்கங்களிருந்தன. இம்மாதிரி சங்கங்களுக்கு பிரஸ்தாப ஆக்ட் பொருந்துமா என்கிற பிரஸ்னை இப்போது கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகின்றது.

புதிய சட்டம் பிறந்தது முதல் ஒரே ஒரு சங்கம் மட்டிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மொத்தத்தில் பிரஸ்தாப

புதிய சட்டத்தின்படி 9 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒரு சங்கம் ஆயுள் இன்ஷ்யூரன்சுடன் விவாகத்திற் பணம் கொடுப்பதாக வெளிவந்திருக்கிறது பாக்கி சங்கங்களின்நோக்கம் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்; வருஷாந்திரத்திற்கு (Annuities) பணம் கொடுக்க நோக்கங்கொண்ட யாதொரு சங்கமும் எற்படவில்லை. இந்த ஆக்ட் இந்த ராஜதானியில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டபடியால் பிராவிடன்ட் இன்ஷ்யூரன்ஸ் சங்கங்கள் மாதிரியான அனேக சங்கங்கள் அடக்கப்பட்டுப் போய்விட்டன. பிரஸ்தாப ஆக்ட் மோசடியான சங்கங்கள் தோன்றுவதற்கு இடம் கொடுக்காமலிருக்கிற படியால் பொது நன்மையைக் கொடுக்கும் படியான சட்டமாயிருக்கிற தென்ற எண்ணி எல்லோரும் சந்தோஷப் படுகிறார்கள். ஆனால் அதன் உபயோகம் அம்மட்டில் நிற்காமல் கேவல வருமானம் அடைந்து கொண்டுவரும் பிரஜைகளடங்கிய இத்தேசத்திற்குப் பெரிய நன்மைகளைச் செய்யக் கூடியவும் யாதொரு மோசச்சாயலைக்கூட கனவிலும் நினையாத ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிறவுமான உபயோகமுள்ள சங்கங்களை ஆதரித்து வளர்த்துக்கொண்டு போகுமென்று நம்புகிறோம்.

THE NATIONAL BANK CASE.

நேஷனல் பாங்கி கேஸ்

குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

கடந்த 20 தினங்களாக நடந்துவந்த நேஷனல் பாங்க் கேஸ் வர்த்தக வகுப்பாரும் பாங்கியும் சம்பந்தப்பட்ட கேசாயிருந்தபடியால் விபரமாய்இச்சஞ்சிகையின்மற்றோர் பக்கத்தில் எடுத்துப்பிரசுரித்திருக்கிறோம். நிகழ்நவம்பர்மீ 20உவியாழக்கிழமைகாலையில்கோர்ட்டுகூடினவுடன்பிராசிகியூஷன்தரப்பிற்காகபாரிஸ்டர் மிஸ்டர் பார்ட்டன் அட்டிரஸ்பேசியபின்பு, கோர்ட்டார் ஜூரர்களுக்குகேசின்சாராம்சத்தை எடுத்துச்சொல்லவே, ஜூரர்கள் ஆலோசனை அறைக்குச் சென்று 50 நிமிஷம் கடந்து திரும்பி வந்து முதல் குற்றவாளி சம்பந்தப் பட்டவரையில்4 ஜூரிகள் "குற்றவாளி" என்றும், 5 பேர்கள் "குற்றவாளியல்ல" வென்றும், இரண்டாவது குற்றவாளி சம்பந்தப்பட்ட வரையில் எல்லா ஜூரர்களும் ஏகோபித்து அவர் "நிரபராதி" என்றும் அபிப்பிராயப் படுகிறார்கள் என்று தெரிவித்துக் கொண்டார்கள். இதன்பேரில் கோர்ட்டார் இரண்டாவது குற்றவாளியை விடுவித்து விடும்படி உத்தரவு செய்தார்கள். முதல் குற்றவாளிசம்பந்தப்பட்டவரையில் அவரை விடுவிக்கும் விஷயத்தில் தாமதப் பட்டது. கோர்ட்டார் பாரிஸ்டர் மிஸ்டர் பார்டனுடன் யோஜனை செய்தார்கள். இவர் முதல் குற்றவாளியின் பேரில் சந்தேக மில்லை என்று சொல்ல முடியாதென்றும் ஆதலால் அவரை புனர் விசாரணை செய்யும்படி உத்திரவாக வேண்டு மென்றும் பிரார்த்திக்கொண்டார். அதற்குக் கோர்ட்டார் இந்தக் கேஸ் புனர்விசாரணை செய்யப்படக் கூடிய கேசல்ல வென்று சொல்லி முதல் குற்றவாளியையும் விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

THE MADRAS MARKET REPORTS.
சென்னை மார்க்கட் ரிப்போர்ட்டுகள்.

THE MADRAS MARKET REPORTS.
சென்னை மார்க்கட் ரிப்போர்ட்டுகள்.

Piece Goods.
சீமை ஜவுளி.

15-11-1913.

தீபாவளி பேரங்களுக்குப் பிறகு மார்க்கட் வழக்கம் போல் மந்தமா யிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அமரிக்கையாயிருக்கிறது. அவுஸ்களில் டெலிவரி தாமதமாய் செய்யப்படுகிறது. வெளியூர் வர்த்தகர்களிடமிருந்து உள்ளூர் வியாபாரிகள் பணம் எதிர்பார்க்கிறார்கள்.

(1) Grey Shirtings.
கோரா ஷர்ட்டிங்குகள்.

எங்கு பார்த்தாலும் கையிருப்பு சுமார்; எந்த ரகத்திற்கும் விசாரணை தாராளமா யில்லை.

(2) கோரா ஜாக்நட்டுகள்

கையிருப்பு கனம். விற்பனை உபாயம்.

(3) Grey Mulls.
கோரா மல்லுகள்.

மந்தம் தொடர்ந்தேர்த்தியாக யிருக்கிறது. வியாபாரிகள் நஷ்டப்படுகிறார்கள். உள்ளூர் விலைகளில் விருத்தியில்லை.

(4) Grey Dhoties.
கோரா தோவத்திகள்

எல்லா ரகங்களுக்கும் மார்க்கட் அமரிக்கை.

(5) White Mulls.

கனத்த ரகங்களுக்கு கையிருப்பு சுமார். நடுத்தர ரகங்களுக்கும் நாசூக் ரகங்களுக்கும் விசாரணை அற்பம், கையிருப்பு கனம்.

(6) Prints.
சீட்டிகள்.

கையிருப்பு சுமாராய் குறைந்து போய்விட்டது. மார்க்கட் தற்காலம் அமரிக்கை.

(7) Sarees.
சேலைகள்.

சிகப்பு, கறுப்பு சேலைகள் சம்பந்தப்பட்ட வரையில் மார்க்கட் அமரிக்கை.

Twist and Yarn.
நூல்.

இவ்விடம் மார்க்கட் மந்தம்; சீமை விலைகள் எல்லாம் ஏறி நிற்கின்றன; இவ்விடமிருந்து சீமைக்கு இன்டெண்டு போகிறதில்லை; ஏன் என்றால் பின்னால் விலை இறங்குமென்று வியாபாரிகள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; வெளியூர்களிலிருந்து ஆர்டர்கள் வருகிறதில்லை. கையிருப்பு சரக்கை வட்டியாய் விடுமென்று விலை குறைத்து விற்பனை செய்துகொண்டு வருகிறார்கள். பஜாரில் நடுத்தர நூல் அதிகமாய்ச் செலவாகிறது கிடையாது. 60-நெம்பர் சிகப்பு நூலும் கார நூலும் 50-ம் நெம்பர் உண்டை நூலும் 40-ம் நெம்பர் சிகப்பு உண்டை நூலும் சுமாராய் விற்பனையாகி வருகின்றன. 100-ம் நெம்பருக்கு மேற்கொண்ட ரகங்களுக்கு வெளியூர் ஆர்டர் கிடையாது.

Cotton.
பஞ்சு.

மார்க்கட் அமரிக்கை. வொராங்கல் தேசத்திலிருந்து இப்போது புதிதாய் வரும் பஞ்சு, சென்ற வருஷத்திய பஞ்சைப் பார்க்கிலும் வலிவாகவும் வெளுப்பாகவு மிருக்கிறது. தற்கால விலை பாரம் ஒன்றுக்கு ரூ. 195 அடக்க

மாகிறது. விலை அதிகமா யிருப்பதால் வாங்குறெவர்கள் நிதானிக்கிறார்கள். சீமைக்கு சாம்பில்கள் போய்க்கொண்டிருக்கின்றன. வர்த்தகர்கள் ஆர்டர்களை எதிர் பார்க்கிறார்கள். குண்ட்டூர் சிகப்புப்பஞ்சை சீமைக்காரர்கள் அபேட்சையாகக் கேட்கிறார்கள். சரக்கு இன்மையாலும் பருவகாலம் ஆகர் ஆக யிருப்பதாலும் விலைகள் மாத்திரம் ஏறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் சரக்கு அகப்படுகிறதில்லை. தற்கால விலை: பேல் கட்டு பாரம் ஒன்றுக்கு ரூ. 180; ஆதோனி, பல்லாரி பிராந்தியங்களில் பயிர் செழிப்பாயும் சுபிக்ஷமாயு மிருக்கிறது. சென்ற வருடத்தைக்காட்டிலும் இவ்வருடம் விசாலமாக பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஏன் என்றால் பயிர் செய்யப்படும் காலத்தில் விலைகள் ஏறி யிருந்தபடியால் நீலிசாகுபடி செய்யும்படியான இடங்களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது.

Turmeric.

மஞ்சள்.

மார்க்கட் மிகவும் மந்தம். கல்கத்தா கிராக்கியும் கிடையாது. சீமை கிராக்கியும் கிடையாது. ஏராளமான சரக்குகளை பூமியில் புதைத்து லாபம் அடையலா மென்று எதிர் பார்த்தவர்கள் எல்லாம் இப்போது மழையால் நஷ்டமடைந்து வந்த விலைக்கு விற்றுப் போட விருப்பமுள்ளவர்களா யிருக்கிறார்கள். நாளது தேதி விலை.

கடப்பை ராசி தினுசுக்கு பாரம் ஒன்றுக்கு	ரூ. 23, ரூ. 24
விரல் ,,	ரூ. 25, ரூ. 26

18—11—1913

Ground Nuts.

மணிலாக் கொட்டை.

இப்போது புதுச் சரக்கு, அனந்தப்பூர், குத்தி, இந்துப்பூர்—இத்தேசங்களிலிருந்து சரக்குகள் வந்துகொண்டிருக்கின்றன. உள்ளூர் அவுஸ்காரர்களுடைய ஏஜண்டுகள் முறையே உற்பத்தி ஸ்தலங்களுக்கு நேரில் சென்று கறுதி செய்து வருகிறார்கள். மார்ஷேயில்ஸ் ஏற்றுமதிக்காக இப்படி நேரில் போய் கறுதிசெய்கிறார்கள், மிஷனில் உடைத்த பருப்புக்கு ரூ. 2 ஜாஸ்தி விலை கொடுக்கிறார்கள். இவ்வகைப் பருப்பை அபேக்ஷைப்பட்டு வாங்குகிறபடியால் மிஷனில் உடைக்க மிஷின்கள் வாங்கப்பட்டு வருகின்றன. ஆகவே 10, 15 தினங்களில் ஏராளமான சரக்குகள் விற்பனைக்கு வரக்கூடும். நிற்க, வேர்க்கடலைப் பயிர் மிகவும் செழிப்பா யிருக்கிறது. பெல்லாரிச் சரக்கை நேரே புதுச்சேரிக்கு வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். திருத்தணி, வெங்கடகிரிசில்லரைச் சரக்குகளை அவுஸ்காரர்கள் ஈரத்திற்குத் தகுந்தபடி உள்ளூரில் கறுதி செய்கிறார்கள். கல்கத்தா சூயேஜ் ஏற்றுமதி கிடையாது. தற்கால விலை,

கொட்டை புட்டி ஒன்றுக்கு	ரூ. 60, ரூ. 61
மிஷன் உடைத்த பருப்பு	ரூ. 42
சாதாரண பருப்பு	ரூ, 40, ரூ. 41

Metals.

உலோகங்கள்.

17—11—1913

வடதேசங்களில் பண முடக்கத்தினாலும் தென்தேசத்தில் இருப்புப்பாதை உடைப்பாலும் தற்காலம் வியாபாரம் பெரும்பாலுமில்லை. சுமார் 15 நாளாக சீமைவிலை ஒரு டன்னிற்கு ஒரு சவரன் குறைந்திருக்கிறது. ஆனால் இவ்வருடம் உற்பத்தி குறைவாயும் செலவு ஜாஸ்தியாகவு மிருந்தும் விலை குறைவது ஆச்சரியமாருக்கிறது. பண முடையால், வெளியூர் வர்த்தகர்கள் இது வரையில் வாங்கிய சரக்குகளுக்கு பணம் அனுப்ப கஷ்டப்படுகிறார்கள்.

வெள்ளீயம் விலை ஒரு கண்டி ஒன்றுக்கு 190 வராகன்.

இரும்பு: இரண்டு மூன்று தினங்களாக வியாபாரம் சற்று மளமளப்பா யிருந்தது. ஆனால் அதிக மழையால் அது தடைப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் அதிக வெள்ளத்தாலும் ரயில் ரோட் உடைப்பாலும் சரக்கு போக்குவரத்து தடைப் பட்டதால் தெற்கத்தி வியாபாரம் பூஜ்ஜியம்.

பெல்ஜியன் பார் நெ. 2	ரூ. $21\frac{1}{2}$.
சுவீடன் ,,	ரூ 38 to 40.
பெல்ஜியன் தகடு 6—9, 12—13	ரூ. 26 to 30.
இரும்பு	ரூ. 28 to 30.
எட்டு பட்டை ஸ்டீல்	ரூ. 22 to 26.
வில் ஸ்டீல்	ரூ. 28 to 30.
சதுர உருண்டை பெல்ஜியன்	ரூ. 22 to 23.
ஸ்வீடிஷ் ,,	ரூ. 38 to 40.

Camphor.

கற்பூரம்.

தற்காலம் நல்ல வியாபார மிருக்கவேண்டிய திருக்க வியாபாரமே யில்லை. கையிருப்பு சரக்கு அதிகம். ஜபானில் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் ஒரு பாரிவியாபாரி முறிந்து போய் விட்டதாகப் பிரஸ்தாபம்.

காளது விலை. ரூ: 1 முதல் 1-2

கற்பூரப் பலகை 1 பவுன் தகாடப்பி ரூ. 1 முதல் 1-2.

ஜப்பான் மட்டம் B.B. 1 பைக்கல் ரூ 163.

ஹாங்காங் ரூ. 140.

தேக்கு

18—11—1913.

மார்க்கட்மந்தம்.—ரெங்கூன், மோல்மீன் சரக்குகள் விலை ஏறியிருப்பதால் உள்ளூர் மார்க்கட் மந்தம். சதுரம் ஸ்டாக்செய்துவைத்திருப்பவர்கள் ஷை ஸ்டாக்கை கறைக்கும்பொருட்டு R. குறி சதுரத்தை ரூபா 165 விதம் கொள்முதலுக்குகம்மிவிற்கிறார்கள். பாங்காக்சீயம் மலைகளில் கனத்தமழை அடிப்பதால் விலை யிறங்குமென்று டெப்போகாரர்கள் ஸ்டாக் வைத்துக்கொள்ள பயப்படுகிறார்கள்.

L. S. சதுரம் ரூபா 200 ஒருடன்.
R. ,, ,, 165 ,,
2×½ 3 முதல் 5 அடி சட்டங்கள் ரூபா 164
,, 6 அடி ,, ,, 186

கிரசனாயில்.

10—11—1913.

ஆசியா பெட்ரோலியம் கம்பெனி.

கிளிஞ்சல் குறி 150டிகிரி	ரூ. 5- 8-0	1 கேஸ்.
உதசய சூரியன்	,, 4- 4-0	2 டின்.
ஆந்தை	,, 3-10-0	,,

ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனி.

பனிமார்க் 150 டிகிரி	ரூ. 5-13-6	1 கேஸ்.
செஸ்டர்	,, 5-13-0	,,
குரங்கு	,, 4-14-0	,,
யானை 125	,, 4- 4-6	2 டின்.
ஷை	,, 3-10-6	8 காலன்.

பர்மா ஆயில் கம்பெனி.

வில்விப்புஷ்பம் 150	ரூ. 5- 8-0	1 கேஸ்.
நெருப்பு பூச்சி	,, 4-15-6	,,
தங்கமோகர்	,, 4- 4-6	,,
விக்டோரியா	,, 3-10-0	,,

பெட்ரோல்.

பிராட்மோட்டார்	,, 1- 1-0	1 காலன்.
B. U. C.	,, 1- 0-0	,,
கிளிஞ்சல்	,, 1- 0-0	,,

Rice.

அரிசி.

19—11—1913.

மார்க்கட் உறுதி. உள்ளூரில நல்ல போம்; வெளியூர் ஏற்றுமதிக்காகவும நல்ல போம் நடந்து வருகின்றது.

சமீபத்தில் உண்டான கனத்த மழையை முன்னிட்டு ஸ்டாக் வைத்திருப்பவர்கள் விற்றுப் போட விரும்புகிறார்கள். கிராக்கி செய்யாமல் கூடியவிலையில் கிடைக்கக் கூடிய நல்லவிலைக்கு விற்று வருகிறார்கள். ரெங்கூனில் அரிசியும் நெல்லும் கனத்த கையிருப்பு, விலையில் முறையே 8 அணா 4 அணா கம்மிவிற்கத் தயாராயிருக்கிறார்கள். மார்கட் சமீபத்தில் மந்தமாய் போய் விடு மென்று வர்த்தகர்கள் எதிர்பார்க்கிறபடியால் வியாபாரிகள் தாராளமாய் வாங்குகிற தில்லை நாளது தேதிவிலை.

நெல்லூர். அரிசி 29 படி மூட்டை 1-க்கு.

முதல் தரம்	ரூ. 7-12-0	முதல்	ரூ. 7-13-0.
2-ம் தரம்	,, 7- 8-0		,, 7-10-0.

சர்க்கரை 10—11—1913

மார்க்கட் உறுதி; உள்ளூரின் சுமாரான பேரம், வெளியூருக்கு அனுப்பப் படுவதற்காகவும் சுமாரான பேரம் நடந்து வருகிறது. சமீப காலத்தில் வந்த ஜாவா ஸ்டீமரில் வந்த சரக்கையைச் சேர்த்துமார்க்கட்டில் சுமார் 16ஆயிரம் மூட்டைகள் கையிருப்பிருக்கின்றன. பணக்கசாலாவை முன்னிட்டு உள்ளூர் மார்க்கட் மந்தமாயிருக்கிறது. கடந்த வாரத்தில் உண்டான கனத்த மழையை முன்னிட்டு பெங்களூரிலிருந்தும், பெல்லாரியிலிருந்தும் ஆர்டர்கள் தாராளமாய் வருகிறதில்லை. ரூ. 19-2-0 மேனிக்கி 500 மூட்டைகள் தாராளமாய்பேரம் செய்யப்பட்டிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் விலை ரூ. 19-க்குக் குறைந்து போகுமென்று வாங்குகிறவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவுஸ் காரர்களால் புதிய இன்டெண்டுகள் கொடுக்கப்படுகிறதில்லை; சீமை விலைகள் ஏறியிருக்கின்றன. ஆதலால் விலைகள் இறங்காமலிருக்கின்றன. நாளது தேதிவிலை ரூ. 19-2-0.

N. B. 13உ வாக்கில் இன்னொரு ஸ்டீமர் எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் விலை இறங்குமென்று வாங்குகிறவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

புளி.

20-10-1913.

மார்க்கட்மந்தம்; உபாயபேரம் உள்ளூரில் நடக்கிறது. காண்டினன்டிற்கு ஏற்றுமதி கிடையாது. நாளது தேதிவிலை ஒரு கண்டி ஒன்றுக்கு 7-முதல் 11 வராகன்.

10-11-1913.

ரிப்போர்ட்டில் மாறுதலில்லை.

மிளகாய்.

18-11-1913.

மார்க்கட் மந்தம். கடந்த ஒருமாதமாக ஒரே நிதானமாயிருந்தவிலை இப்போது இறங்கிவிட்டது. குன்டூர் மிளகாய் தற்கால விலை—9 அல்லது 10 வராகன்; பாரம் ஒன்றுக்கு வியாபாரிகள் ஜாஸ்தி விலைக்கு கொளுமுதல் செய்து இப்போது குறைந்த விலைக்கு விற்பதாய் தெரிகிறது. புதுச்சரக்கு வரவேண்டிய காலம் சமீபத்திருப்பதால் இன்னும் விலை இறங்கக்கூடும்.

பரிமிளகாய்—பாரம் ஒன்றுக்கு 14 வராகன் முதல் 15-வராகன்.

கோத்தமல்லி.

18-11-1913.

மார்க்கட் மந்தம்; உள்ளூரில் நல்லபேரம் கல்கத்தா ஏற்றுமதிக்காகவும் பேரம் நடந்திருக்கிறது. மார்க்கட்டில் அதிக கையிருப்பில்லை. விலை அரை வராகன் குறைந்து போயிருக்கிறது. நாளது தேதிவிலை $4\frac{1}{2}$ முதல் 5 வராகன்.

வெங்காயம்.

18-11-1913.

மார்க்கட் உறுதி; பினங்கு சிங்கப்பூர், ரெங்கூன் ஏற்றுமதிக்காக உள்ளூரில் நல்லபேரம். பெல்லாரி தாட்பத்திரி சரக்கு வரவு உபாயம். கிராக்கி அதிகமாயிருக்கிறது. மார்க்கட்டில் சரக்கில்லை. நாளது தேதிவிலை பெல்லாரிச் சரக்கி

ற்கு ரூ. 18—0—0 தாட்பத்திரி சரக்கிற்கு ரூ. 15-0-0.

கடுகு.

18—11—1913

மார்க்கட் அமரிக்கை; உள்ளூரில் சுமாரான பேரம், கான்டினன்டிற்கு எற்றுமதியில்லை. மார்க்கட் சரக்கு கையிருப்பு பூஜ்ஜியம். நாளது தேதிவிலை சின்ன ரகத்துக்கு ரூ. 39 to ரூ. 40. பெரிய ரகத்திற்கு—கண்டி ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 36.

எள்ளு.

18—11—1913.

மார்க்கட் மந்தம்; ஏற்றுமதிக்காரர்களிடமிருந்து விசாரணையில்லை. விலைகள் குறைந்து போயிருக்கின்றன. நாளது தேதி விலை 168 ராத்தல் கொண்ட ஒரு மூட்டை ரூ. 14 முதல் ரூ. 15-8-0.

ஆமணக்கு.

10-11-1913.

மார்க்கட் மந்தம். எண்ணெய் ஆலைகளில் கேவல பேரம் நடந்துவருகின்றது பருவம். ஆக்கராயிருப்பதால் மார்க்கட்டில் அதிக கையிருப்பில்லை. விலை மூட்டை ஒன்றுக்கு 4 அணு குறைந்து போயிருக்கிறது. கான்டினன்ட் விசாரணையில்லை. நாளது தேதி விலை ரூ. 10-4 (சாட்கிறி) வாராங்கல் சரக்கு ரூ. 10.

புளி.

19—11—1913.

மார்க்கட் ஏற்றமாயிருக்கிறது. ஸ்டாக் கம்மி. முந்தி வாங்கி யிருப்பவர்கள் நல்ல லாபத்தை அடைந்து வருகிறார்கள். புளி உற்பத்தியாயிருக்கு மிடங்களில் விலை ஜாஸ்தியாக விருப்பதுடன் கூட சரக்கு கையிருப்பில்லை. மதிராசில் பெங்களூர் புளி—வராகன் 12 முதல் 13.

மற்றப்படி பலச் சரக்குகள் 8 முதல் 11.

உருளைக் கிழங்கு.

10—11—1913

மார்க்கட் மந்தம். உள்ளூரில் சுமாரான பேரம். கல்கத்தா ஏற்றுமதிக்காகவும் சுமாரான பேரம் நடந்து வருகின்றது. பருவம் ஆகாரா யிருப்பதால் சொற்பச் சரக்குத்தான் கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பங்களூர் சரக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. நாளது தேதி விலை கண்டி ஒன்றுக்கு ரூ. 18 முதல் ரூ. 20.

நிலக்கரி.

18—11—1913

மழையாலும் பிரவாகத்தாலும் கட்டுப்பட்டாலும் விலை ஏறிக்கொண்டு வருகிறது. நாளது தேதி விலை ரூ. 16-8-0 முதல் ரூ. 17-8-0

சிமிட்டி.

18-11-1913.

கைமார்க்	பிப்பாய்	ரூ.	9	0	0
கோலியாத்	,,	ரூ.	8	12	0
பீட்டர்	,,	ரூ.	9	0	0
லீ	,,	ரூ.	8	14	0
ஷாமாப்	,,	ரூ.	7	0	0
மண்வெட்டி	,,	ரூ.	6	0	0

சாக்கு

10-11-1913.

மார்க்கட் உறுதி; பாக்குகள் முறிந்துபோய் விட்டதாலும் பணக்கசாலாவாக யிருப்பதாலும் கல்கத்தாவில் எல்லா தினுசுகளின் விலையும் ரூபா 1 குறைந்துபோயிருக்கிறது.

———:o:———

THE LEATHER TRADE SCHOOL.

தோல் வியாபாரப் பள்ளிக்கூடம்.

தோல் வியாபரப் பள்ளிக்கூடம் எப்போது ஸ்தாபிக்கப்படுமோ நாம் அறிகிலோம்! தோல் நிபுணரோ 1912 மார்ச்சு மாதத்திலே நியமிக்கப்பட்டார். பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஸ்தலம் குறிப்பிடும் சம்பந்தமாக கடந்த ஜூன் மீ ம் வரையில் கவர்ன்மெண்டார் யாதொரு உத்திரவும் பிறப்பிக்க வில்லை! பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படாம லிருக்கும்போது தோல் நிபுணருக்கு போதுமானபடி வேலையில்லாம லிருந்தது. ஆகவே பெங்களூரிலிருக்கும் மைசூர் தோல் பதனிடும் சாலையில் எப்படி வேலை நடத்துகிருர்கள் என்பதைப் பார்த்து வரும் பொருட்டு பெங்களூருக்கு அனுப்பப் பட்டார். அவ்விடமிருக்கும்போது அவர் அனேக சீர்திருத்தங்களைச்செய்தார். பெரும்பாலும் தற்கால ஆயுதங்களையும்தளவாடங்களையும் எப்படி உபயோகப்படுத்துகிறதென்று காண்பித்துக் கொடுத்து வந்தார். பெங்களூரிலும் பொதுவாய் இந்தியாவிலும் தோலைப்பதனிடும் சம்பந்தமாய் நேரிடும் கஷ்ட மென்னவென்ருல் குரோம் முறையில் பதனிடப்பட்டதோல்களை இறுகவைப்பதுதான் இது விஷயமாக நிபுணர் திருப்திகரமாக வேலைசெய்து நல்ல புயனை விளைவித்தார். ஆகவே ஒரு வகைத் தோலைப் பதனிடுவதை நன்ருய் சிப்பந்திகளுக்கு போதித்துக் கொடுத்திருக்கிருர். அப்படிப் பதனிடப்பட்ட தோல் நல்ல விற்பனை யாகிறது. இந்தியாவில் அதிகமாக செலவாகாத தோல் இதே மாதிரியாக பதனிடப்பட்டு அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வது சாத்தியமான காரியம்.

INSTRUCTION IN DYEING.

சாயம்போடப் போதித்தல்.

மதுரையில் ஒரு சாய ஆராய்ச்சி சாலை ஸ்தாபிப்பதற்காக கவர்ண் மெண்டார் 5 ஆயிர ரூபா சாங்கிஷன் செய்து மதுரையில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தும் படியாக உத்திரவு செய்திருந்தார்கள். இந்த ஆராய்ச்சிசாலை அமைக்கப்பட்டு வரும்போது சாயத் தொழில் நிபுணராகிய டாக்டர் மார்ஸ்டன் சௌராஷ்டிர வகுப்பு பிரமுகர்களுடைய கூட்டுறவை சம்பாதித்து சாயத்தொழில் அவர்களுக்குளம்மட்டில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதைப் பரிக்ஷார்த்தமாக அறிந்து கொள்ளும் பொருட்டு நான்கு பேர்கள் தம்முடைய சாயப்பள்ளிக்கூடத்திற்கு வந்துகொண் டிருக்கும்படியாக ஏற்பாடு செய்தார்கள். இந்த நான்கு பேர்களுடன் இன்னும் இரண்டு பேர்கள் சேர்ந்தார்கள். ஆக 6 பேர்கள் ஷை பள்ளிக்கூடத்திற்குப் போய்வந்தார்கள். இவர்களுள் இரண்டு பேர்கள் நின்று போய்விட்டார்கள். பாக்கி நான்கு பேர்கள் வேலையில் அமர்ந்திருந்தபடியால் ஒழுங்காகவே பள்ளிக்கூடம் வராமல் முடிவில் நின்றுபோய் விட்டார்கள். மொத்தத்தில் மதுரை சாயவேலைக்காரர்கள் தொழில் சம்பந்தமான உதவியை விரும்ப வில்லை. அவர்கள் விசாரிப்ப தெல்லாம்கூடி குரோம் (Chrome) மஞ்சள் சாயம் போடு வதைப் பற்றிதான். பின்னும் தற்காலம் அவர்கள்செய்யும் சாயத்தொழிலிருக்கும் குற்றத்தைக் கண்டுபிடித்து அகற்ற வேண்டுமென்பது அவர்கள் விருப்பமல்ல; இறக்குமதி செய்யப்படும் சாயச் சரக்குகளின் ரங்கு மாதிரியாக உள்ளூரில் தயார் செய்யவேண்டு மென்றே விரும்பினுர்கள். குரோம் சாயம் போடமுடியுமா என்பதைப் பற்றி மதுரை ஜெயில் சூப்பிரண்டு கூட விசாரித்தார். ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நூலில் காணப்படும் சாயத்தைப்

போல உள்ளூரில் தயார் செய்ய முடியுமா என்கிற பிரஸ்னையை ஆராய டாக்டர் மார்ஸ் டன் உத்தேசித்திருக்கிறார். சாய நிபுணர் இரண்டு வருஷமாகச் செய்தவேலை இது தான். ஆயினும் அவர் செய்திருக்கும் இந்த வேலையை இன்னும் விபரமாக இன்னொரு முறை இவ்விடத்தில் எடுத்து எழுதுவோம்.

MADRAS STATUE OF THE KING.

மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களுடைய உருவச் சிலை.

ஸர் ஆர்தர் லாலி அவர்கள் சென்னைக்குக் கவர்னராயிருந்தபோது சென்னையில் திரவிய சம்பத்து வாய்ந்தவராயிருக்கும் திவான் பகதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜ தாஸ் அவர்கள் தம்முடைய செலவில் மகாராஜா அவர்களின் பட்டாபிஷேகம் டில்லிதர்பார் ஞாபகார்த்தமாக அவர்களுடைய உருவச் சிலையைத்தயார் செய்து மவுண்ட் ரோட்டிற்குப் போகும்வழியிலிருக்கும் மைதானத்தில் வைக்கும்படியான பாக்கியத்தைத் தமக்குத் தந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதன்பேரில் பிளான் போட்டு சிலை தயார் செய்யும்படியாக இங்கிலாண்டில் மகாப் பிரசித்திபெற்ற சிற்பியாகிய மிஸ்டர் ஜோசப் கிராஸ் லாண்டு மெக்லூருக்கு எழுத, அவரும் ஒப்புக்கொண்டு வேலை ஆரம்பித்துவிட்டார். தரை மட்டத்திலிருந்து 15 அடி உயரமுள்ள ஒரு மேடையின்பேரில் 10 அடி 6 அங்குலமுள்ள மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுடைய சிலை நிற்கும்; சிலை வெங்கலத்தால் செய்யப்பட்டு வருகிறது. இப்பேர்ப்பட்ட சிலை ஒன்று தயார் செய்வதென்றால் சகஜமாக ஒருவருஷம் செல்லும். ஆனால் பிரஸ்தாப வேலை கடந்த 6 மாதத்திற்குள் அனேகமாய் முடிவுபெற்று சிலைவார்ப்பதற்குத்தயாராயிருக்கிறது. சிற்பிக்குவேண்டிய வசதிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. சிற்பி, உருவத்தை நிரணயப்படுத்திக்கொள்ளும்படியாக அரசர் சிற்பியின் சாலைக்கு சென்று தம்மை உருவு எடுத்துக் கொள்ளும்படி வசதிகொடுத்தார். லண்டன் கோபுரத்திலிருக்கும்படியான கிரீட அறைக்குப் போய் அதைப்பலமுறை பார்வையிடும்படியான வசதிகள் சிற்பிக்குக்கொடுக்கப்பட்டன. மகாராஜா அவர்கள் பட்டாபிஷேக உடுப்புடன் கிரீடம் அணிந்துகொண்டு நிற்கும் வண்ணம் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்கள் சென்றமாஸம் திடீரென்று சிற்பிசாலைக்குச் சென்று தம்முடைய சிலையின் வேலை எம்மட்டிலிருக்கிற தென்று பரிசோதித்துப் பார்த்தார். வேலைப்பாட்டை வெகுவாய்ச்சிலாகித்ததோடு அடிமட்டம் தாழ்ந்திருந்தால் அதாவது 6 அங்குலம்குறைந்திருந்தால் நலமாயிருக்குமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

Indian Sugar.

இந்தியச் சர்க்கரை.

இந்தியச் சர்க்கரை வியாபாரம் சம்பந்தப்பட்டவரையில், உலகத்தில் பலமான வியாபாரங்களுக்குள் ஒன்றாக எண்ணப்பட்டு வருகிறது. ஆனால் அது உற்பத்தியாகும் வழியை ஆராயின் ஒரு சிசுவுக்குச் சமமாயிருக்கிறது. இப்போது கரும்புச் சர்க்கரையை எதேஷ்டமாக இறக்குமதி செய்யும் தேசத்திற்குள் ஒன்றாக எண்ணப் பட்டுவருகிறது. இப்போது கரும்புச் சர்க்கரையை எதேஷ்டமாக இறக்குமதி செய்யும் தேசத்திற்குள் ஒன்றாக எண்ணப்படக் கூடா தென்பதற்கு காரணமில்லை. நூதனமாக கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் வழிகளை அனுசரித்து கரும்பு சாகுபடி செய்யப் பட்டால் இந்திய சர்க்கரை அன்னிய

தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படலாம். சிலகாலமாக விவசாய இலாக்காக் காரர்கள் இது விஷயமாகக் கவனித்து வேலைசெய்து வருகிறார்கள். நல்ல தினுசு கரும்புகளையும் பயிர் செய்து வருகிறார்கள். சென்ற வருடத்தில் 20·39 லக்ஷம் ஏக்ரா சாகுபடி செய்யப்பட்டிருக்கும்போது பிரஸ்தாப வருடத்தில் 20·42 ஏக்ரா சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 28 ஆயிரம் ஏக்ரா அதிகப் படியாய் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் இன்னும் அதிகப்படியான ஏக்ராக்கள் சாகுபடி செய்யப் பட்டிருக்கவேண்டும். ஏன் எனில் இந்தியாவில் உற்பத்தியாகும் கரும்பில் பாதி ஐக்கியமாகாணத்தில் உற்பத்தியாகின்றது. இந்த மாகாணத்திலிருந்து உத்தேசமான கணக்கு வந்திருக்கிறதே ஒழிய சரியானகணக்குவரவில்லை. ஆகவே கரும்புப் பயிர் பிரஸ்தாப வருடம் ஆகஸ்ட்மீ வரையில் சுபிக்ஷமாயிருந்து வந்திருக்கிறது. நிற்க, இந்தியாவிற்கு அடுத்தபடி கியூபா,ஜாவா,மோரிஸ்ஆகிய இந்த தேசங்களில் கரும்பு ஏதேஷ்டமாக சாகுபடி செய்யப்படுகின்றது. இந்தியாவில் இவ்வருஷம் எவ்வளவு சர்க்கரை கிடைக்குமென்று இப்போது உத்தேசமாகச்சொல்லமுடியவில்லை. கியூபாவில் 1912-ல் 10·89 டன் சர்க்கரை கிடைத்திருக்க இவ்வருடம் 20·25 லக்ஷம் டன் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. ஜாவாவில் சென்ற வருஷம் 10·33 லக்ஷம் டன் கிடைத்திருக்கிறது. இவ்வருஷம் 10·5 லக்ஷம் டன் எதிர்பார்க்கப்படுகிறது: இந்தியாவிற்குப் பெரும்பாலும் ஜாவாச் சர்க்கரையே இறக்குமதி செய்யப்படுகிறது. மோரீஸ் 260,000 டன் எதிர்பார்க்கின்றது. போர்ட்ரேய்க் கோவிற்கு சென்ற வருஷத்தைவிட 40 ஆயிரம் டன் அதிகப்படியாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றது. பீஜி, கூவீன்ஸ்லாண்டு, ரியூனியன், பிரேஜில் முதலிய விடங்களில் கால சுபாபம் சரியாயில்லாததால் பயிர் செழிப்பாயில்லை. மாசூல் காலத்திற்குள் அனேக சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். ஆயினும் இவ்வருடம் சர்க்கரை கிராக்கியா யிருக்கமாட்டா தென்பதற்குப் போதுமான அறிகுறிகளிருக்கின்றன.

CONTROL OF BANKS IN INDIA.

இந்திய பாங்கிகளை வரையறுத்தல்.

:(*):

இந்திய ஜனங்கள் தங்களுடைய ரொக்கச் சொத்துக்களைப் பாங்கியிலும் வட்டிக்குப் போடுகிறதில்லை; மற்றவர்கள் மீது நம்பிக்கை வைத்து கொடுக்கவும் மாட்டார்கள். அவைகளை மூலதனமாக வைத்து வியாபாரமும் செய்ய இணங்குகிறதுமில்லை. பின் என் செய்வார்கள் என்றால், புராதீன காலமுதல் புதைத்து வைத்துக்கொண்டேவந்தார்கள்! புதைத்துவைத்திருப்பதையும் வேறெவருக்கும் சொல்லமாட்டார்கள். இவ்விதமான அநாகரீக குணதிசயம் பொருந்தியஜனங்கள் இப்போது நாளடைவில் தங்களுடைய சம்பாத்தியத்தைப்பாங்கியில் போடவும் பெரிய வியாபார முயற்சிகளில் போட்டு முடக்கவும், கவர்ன்மெண்டு பத்திரங்கள் வாங்கவும் டிபன்சர்களில் போட்டு முடக்கவும், கம்பெனிகளின் பங்குகளை கிரையம் பெறவும் தலைப்பட்டிருக்கிறார்கள். இப்படி நம்பிக்கை என்பதை கனவிலும் அறியாத ஜனங்கள் நம்பிக்கை வைக்கத் தலைப்பட்டு பாங்கிகளிலும் மற்றுமுள்ள ஸ்தாபனங்களிலும்பணத்தை முடக்க ஆரம்பித்திருக்கும்போது பலவிதமான பாங்கிகளும் கம்பெனிகளும் பாங்கிங் ஏஜன்ஜிகளும் பாங்கிங் சொஸைட்டிகளும் ஏற்பட்டு பெருவரியாக ஜனங்களுடைய பணத்தை வாங்கி மோசம் செய்து விடுகிறார்கள். பாங்கியினுடைய சாயலைக்கூட தெரியாத கேவல ஸ்தாபனம்கூட பாங்கி என்று பெயர்வைத்துக் கொள்ளுகிறது. மூலதனம் இவ்வளவு இருக்கிறதென்

று பயிரங்கப் படுத்தாதவும் கணக்குகளைப் பயிரங்கப்படுத்தாதவும் டிவிடெண்டு கொடுக்காதவுமான கம்பெனிகள்கூட பாங்கிகள் என்று பெயர்வைத்துக் கொள்ளுகின்றன.

"பாங்க்" என்கிற பெயரைக் கண்டவுடன் ஜனங்கள் அது எதோ பெரிய வரவு செலவு செய்யும் கம்பெனி என்று மயங்கி அவைகளில் பணத்தைப் போட்டு மோசம் போகிறார்கள்! இதனால் ஒழுங்காக நடத்தப்பட்டுவரும் கம்பெனிகள் அல்லது பாங்குகளுடைய கீர்த்திகூட கெட்டுப்போகக் கூடியதா யிருக்கிறது. அவைகளையும் ஜனங்கள் நம்பப் பின்வாங்குவார்கள். ஆகையால் "பாங்க், பாங்க்கர்" என்கிற பதங்களை இந்தியன் கம்பெனி ஆகட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனிகள் மட்டிலும் உபயோகப் படுத்தவேண்டுமென்றும் அப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாத மற்ற கம்பெனிகள் உபயோகப் படுத்தக்கூடாதென்றும், ஆகவே'பாங்' "பாங்க்கர்" என்கிற பதங்களை பிரயோகப்படுத்த நிபந்தனைகள் ஏற்பட வேண்டுமென்றும் இது விஷயமாகச்சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுந் தெரியவருகிறது."பாங்கி" என்று பெயர்வைத்துக்கொள்ள வேண்டுமானால் அடியிற் கண்ட அம்சங்கள் அந்தக் கம்பெனிக்கு அமைந்திருக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

(1) பங்குதாரர்கள் கொடுத்த மூலதனத்தின் தாழ்ந்த தொகை பயிரங்கப் படுத்தப்பட வேண்டும்.

(2) ஷை மூலதனத்தின் ஓர் பாகம் வேலை ஆரம்பித்த சொற்ப காலத்திற்குள் கொடுக்கப் படுமென்று உறுதி சொல்லப்பட வேண்டும்.

(3) லாபத்தைக் கொண்டு "ரிசர்வ்நிதி" ஏற்படுத்தி வளர்த்துக்கொண்டு வரவேண்டும்.

(4) லேவாதேவி செய்யும் ஒருபாங்க் அதன் லாபத்தை இழக்கும்படியான எந்தத் தொழிலும் செய்யக் கூடாது.

இம்மாதிரி சில நிபந்தனைகள் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தேசித்து இந்தியாவிலுள்ள வர்த்தக ஆலோசனை சபைகள் முதலானவைகளுக்கு அபிப்பிராயம் அனுப்பும்படியாக எழுதி யிருக்கிறார்கள்.

——:(✱):——

THE SOUTHERN INDIA CHAMBER OF COMMERCE.

தென்னிந்தியாசேம்பர் ஆப் காமர்ஸ்.

1913-ம் வருடம் அக்டோபர் மாஸம் 12உ கூடிய கூட்டத்தில், மேன்மை தங்கிய வைசிராய் சென்னைக்கு நிகழ் நவம்பர்மாஸம் வரும்போது அவர்களுடைய பேட்டியைப் பெற்று சென்னை வர்த்தகவகுப்பார்தரப்பில் அவர்களுக்கு ஒரு அட்ரஸ் வாசிக்க வேண்டுமென்றும் அடியிற் கண்ட கனவான்கள் அவர்களை கண்டு பேட்டி பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது:—

1. ராவ்பகதூர் P. தியாகராய செட்டி (அட்டரஸ் வாசிப்பார்)
2. கான்பகதூர் M. A. குடூஸ்பஷா சாகேப்
3. திவான்பகதூர்கோவிந்ததாஸ்சதுர்புஜதாஸ். மெசர்ஸ்
4. P. N. முத்துசாமி நாயுடு பி. எ.
5. மவுலான அப்தல் சுப்ஹான்
6. ராவ் சாகேப் T. நம்பெருமாள் செட்டி
7. வி. அருணகிரி நாயுடு பி. எ.
8. டி. சீதாராம செட்டி
9. C. ராமானுஜம் செட்டி
10. C. T. ஆழ்வார் செட்டி
11. H. H. மூகமத் அப்தல் அஜீஜ் சாகேப்
12. C. சீனிவாசாச்சாரி.

P. AND O. MAIL CONTRACT.

பி. அண்டு ஓ கம்பெனியார், தபால் ஒப்பந்தம்.

பம்பாய் வர்த்தகச் சேம்பருடைய அபிப்பிராயம்.

வாரத்திற்கு இருமுறை சீமைத்தபால் போக்குவரத்து செய்ய ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பும் ஸ்டீமர் கம்பெனியார்கள் ஒவ்வொரு தடவைக்கும் டெண்டர் அனுப்பும்படியும் இரண்டு தடவைக்கும் சேர்த்து டெண்டர் அனுப்பும்படியும் கேட்கப்பட வேண்டுமென்றும் தபால்கள் வந்திறங்கவும் போகவும் இட்டாலியில் துறைமுகம் குறிப்பிடப்பட வேண்டுமென்றும், அப்படி குறிப்பிடப்பட்டால் பிரிண்டிசியிலிருந்து போர்ட்சேயிடுக்கு படகு போக்குவரத்து செய்யப்பட வேண்டியதனவசியமென்றும், வாரம் இருமுறை சீமைத் தபால் போக்குவரத்து செய்யப்பட்டால் லண்டன் தபாலாபிசில் இப்போதிருக்கும் வேலை கஷ்டங்கள் ஒழிந்துபோகும் என்றும், இருமுறை போக்குவரத்து செய்யப்படும் தபால்களுக்கு பம்பாய் துறைமுகமே சௌகரியமான துறைமுகம் என்றும், காராச்சி துறைமுகம் சௌகரியமாக விருக்கமாட்டாதென்றும் இந்தியா கவர்ன்மெண்டிற்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். வாரம் ஒருமுறை சீமைத் தபால் போக்குவரத்து செய்யும் ஏற்பாடு 1868-ம் வருடத்தில் ஆரம்பமானது; அப்போது போக்குவரத்தான கடிதங்களையும் இப்போது போக்குவரத்து செய்யப்படும் கடிதங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால், மூன்று மடங்கு அல்லது நான்கு மடங்கு அதிகரித்திருக்கின்றன. வியாபாரமும் ஒருஎல்லைக்குட்படாமல் தாண்டிக்கொண்டு போகிறது. சாமான்கள் ஏற்றிக்கொண்டு பிரயாணம் செய்யும் ஸ்டீமர்கள் வேகத்தை அதிகப் படுத்திக்கொண் டிருக்கின்றன. சமான்களின் இன்வாய்ஸ்கள் பிந்தி வருவதால் வியாபாரத்திற்கு இடைஞ்சல் படுகின்றது. பிரிடிஷ் ஏகாதிபத்யத்தை ஒப்புக்கொண்டிருக்கும் மற்ற நாடுகள் ஒரு வாரத்திற்கு பலதடவை சீமைத் தபால் போக்குவரத்து செய்யும்படியான பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றன. கனடா மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு முறைகள், நியூஜீலண்டு, சிலோன், ஸ்டிரேயிட் ஸெட்டில்மென்டஸ் 9 அல்லது 10 தடவை சீமைத் தபால் போக்குவரத்து செய்யும்படியான வசதிகளை அடைந்து வருகின்றன. ஆகையால் இந்தியாவிற்கும் அம்மாதிரி வசதி கொடுக்கப்பட வேண்டுமென்று பம்பாய் வர்த்தக ஆலோசனை சபையார் இந்திய கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

TRADE NOTES.

வியாபாரக் குறிப்புகள்.

மிஸ்டர் W. B. அன்ட்டர்.

லண்டனில் கூடி வரும் நாணயக் கமிஷன் முன்னில் சாக்ஷியம் சொல்லப் போயிருந்த சென்னை மதிராஸ் பாங்கைச் சேர்ந்த மிஸ்டர் W. B. ஹன்ட்டர் சென்னைக்குத் திரும்பி வந்து விட்டார்.

பிரசித்தமான முத்து வியாபாரி.

ஸிந்து மாகாணத்தி லிருக்கும் டாட்டா என்னும் ஊரிலுள்ள பிரசித்தம் பெற்ற சேத் ஹரிதாஸ் என்னும் முத்து வியாபாரி நொடித்துப் போய் வியாபாரத்தை நிறுத்தி விட்டார். அவர் செலுத்தவேண்டிய வகை ரூ 6-லக்ஷமென்றும் உள்ளூரிலேயே அனேக கடன் காரர்கள் அவருக் கிருக்கிறார்கள் என்றும் நாம் அறிகிறோம்.

இந்தியா பாங்கிகளில் பணக் கசாலா.

லாகூர் பீப்பல்ஸ் பாங்க் முறிந்துபோய் விட்டதனால் உண்டான தொந்திரவுகளை சென்ற மாத "சென்னை

வியாபாரியில்'' எடுத் தெழுதி யிருக்தோம். இது காரணத்தை முன்னிட்டு காரச்சியி லிருக்கும் இந்தியா பாங்குகளிலும் கனத்த பணக்கசாலா உண்டாயிருப்பது மிருந்த கவலைக்கிடமா யிருக்கிறது. முறிந்து போன ஹிந்துஸ்தான் பாங்கிற்கு 35 கிளை களிருக்கின்றன. ஹரி கிருஷ்ணலாலாவின் சகோதரர் அதன் மானேஜிங் டைரக்டரா யிருந்து வந்திருக்கிறார்.

——(-:-)——

சீமை ஜவுளிவியாபாரக் கம்பேனி.

காராச்சியிலிருக்கும் சீமை ஜவுளிவியாபாரக் கம்பெனிக் காரர்களாகிய மெசர்ஸ் வேர்ராஜ் ஹஸ்மாட்ரேய் என்பவர்கள் முறிந்துபோய் விட்டார்கள். இதனுல் காராச்சி பஜாரில் கனத்த காபுரர் உண்டாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தால் சீமை ஜவுளிவியாபாரம் மிகவும் பாதிக்கப்பட் டிருக்கிறது. சர்க்கரை, தானியம், இரும்பு இந்த சாமான்களை வியாபாரம் செய்யும் கம்பேனிகள் நிலைமையும் அசையும் போல் தோற்றுகிறதாம்.

—(:-:)—

"சோயோமாரு"

கிஷன்கேய்ஷா கம்பெனிக்குச் சொந்தமான "சோயோமாரு" என்கிற ஜப்பான் ஸ்டீமர் பெர்ஷியன் கூடாக்கடலி லிருக்கும் அபேடார் என்னு மிடத்திலிருந்து பெட்ரோலியம் எண்ணெய் ஏற்றிக் கொண்டு காரச்சி துறைமுகத்திற்கு வந்தது. பர்மா ஆயில்கம்பெனியின் காரச்சி ஏஜண்டுகளாகிய மெசர்ஸ் ஷா வலஸ் கம்பெனி யாருக்கு டை எண்ணெய்வந்தது. ஜப்பான் ஸ்டீமர் காரச்சிக்கு வந்தது இதுதான் முதல் தடவை. துறை முகத்தில் இதற் கென்று கட்டப்பட்டிருக்கும் ஒரு தடாகத்தில் இந்த எண்ணெய் இறக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்.

———

"சர் வுல்லியம் மேயர்"

வைசிராய் நிர்வாக சபையில் மெம்பர்களா யிருப்பவர்கள் எல்லாம் ஒருவர்பின் ஒருவராய் சொற்ப தினங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் போய் வருவார்கள். பொக்கிஷ மெம்பாகிய சர்வுல்லியம் மேயர் நிகழ் மீ 4 உ ஸிம்லாவை விட்டுப் புறப்பட்டு மான்மத் வழியாக சென்னைக்கு வந்து பெங்களூர் முதலிய விடங்களுக்குச் சென்று கல்கத்தா, ஸிம்லா முதலிய விடங்களைப் பார்த்துக் கொண்டு 28 உ டில்லிக்குப் போய்ச் சேருவார். (எழுதினதற்குப் பிறகு ஏற்பாடு மாறிப்போய்விட்டது ப-ர்).

———

"மிஸ்டர் எப்ரகாம்"

இந்தியா அஸிஸ்டன்ட் காரியதரிசியாகிய மிஸ்டர் எப்ரகாம் இந்தியாவிற்கு வரப் போகிறார். 5 வாரகாலம் இவ்விடம் தங்கியிருப்பார். இந்திய ரயில்வே இலாக்காவிஷயமாய் அடிக்கடி அனேக கடினமான பிரஸ்னைகள் உண்டாகின்றனவாம். இவைகள் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா மந்திரி யாருக்கும் போக்குவரத்தாகும் கடிதங்களால் பைசல் செய்யப்படக்கூடாதனவா யிருக்கின்றனவாம். ஆகையால் அனுபோக முடையவர்களுடன் நேரில் கலந்து பேசினால் ஒரு முடிவு செய்யலா மென்று இந்தியா மந்திரியாரும் வைசிராயும் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக மிஸ்டர் எப்ரகாம் இந்தியாவிற்கு அனுப்பப்படப்போகிறார். ரயில்வே கம்பெனிகளுக்கும் கவர்ன் மெண்டிற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் மூலதனம்கம்பெனிகளுக்கு எப்படி சப்ளை செய்வதென்பதை பற்றியும் மிஸ்டர் எப்ரகாம் கலந்து யோஜனை செய்வார்.

———

மெசர்ஸ் டிரச்சர் அண்டு கோ.

பம்பாயிலிருக்கும் மெசர்ஸ் டிரச்சர் கம்பெனியின் பங்குதார்களில் 100-க்கு 65 அல்லது 70 பேர்கள் பார்சிகர்கள். இதில் அநேக ஐரோப்பியர்களும் பங்குதார்களாகவு மிருந்தார்கள். ஆனல் இவர்கள் இத்தேசத்தைவிட்டுப்போகும்போது அவர்களுடைய பங்குகளை பார்சிகர்களுக்கு விற்றுப் போட்டார்கள். பார்சிக பங்குதார்களில் 24 பேர்கள் ஒரு மீட்டிங்கு கூடி கம்பேனியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட வேண்டு மென்று யோஜனை செய்தார்கள்.

பங்கு ஒன்றுக்கு தற்காலம் ரூ 500 போகு மென்றும் ஆனல் கம்பெனியை முடிவிற்குக் கொண்டு வரும் விஷயத்தில் பங்கு ஒன்றுக்கு ரூ 700 வரையில் போகுமென்று மிஸ்டர் கோலா என்பவர் சொன்னர். மிதமிஞ்சின போட்டியா யிருக்கிறபடியால் கம்பேனியில் வியாபாரம் குறைந்து போய்விட்டதென்றும் இனி விருத்தி அடைய மார்க்க மில்லை என்றும் மிஸ்டர் மாஸ்டர் என்பவர் சொன்னர். இந்த கம்பெனி மேற்க்கு கடல் கரையில் நல்ல பெயரெடு

த்திருக்கும் கம்பேனி என்றும் அது விருத்திஅடைந்து கொண்டுவருகிறதென்றும் இனியும் விருத்தி அடையுமென்றும் கம்பேனியை முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமென்பதை கண்டனம் செய்து பேசினார். பங்குதார்களுடைய கூட்டம் கூட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று ஒரு தீர்மானம் பாஸ் செய்விக்கப்பட்டது.

வர்த்தக கலாசாலை.

நிகழ் வருடம் மே மாதத்திலேயே பம்பாயில் ஒரு வர்த்தக கலாசாலை எற்படுத்தும்படி இந்தியா காரியதரிசியார் சாங்கிஷன் செய்திருந்த போதிலும் கலாசாலை ஸ்தாபிப்பதற்கு ஒரு பிரின்சிபாலில்லாமல் தாமதமாயிருந்தது. இங்கிலாண்டிலிருந்து ஒரு பிரின்சிபாலை அனுப்புவிக்கும்படி இந்தியா காரியதரிசியார் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் அவ்விடத்தில் இன்னும் தகுத்த பேர்வழி அகப்படவில்லை என்று அறிவித்ததின் பேரில் கவர்ன்மெண்டார் அடியிற்கண்ட எற்பாடுகளைச் செய்யும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள்:—இங்கிலாந்திலிருந்து ஒரு பிரின்சிபல் வரும் பரியந்தம் மி·ர் K. சுப்பிரமணிய அய்யர் பி. எ. எல். டி. கௌரவ பிரின்சிபாலாயிருப்பார்; மிஸ்டர் நீலகண்ட சதாசிவதாக்கேவ், யம். எ. மிஸ்டர் ராமச்சத்திர மகாதேவ் ஜோசி, மிஸ்டர் பாஷகராவ் விட்டல்தாஸ் மேத்தா, மிஸ்டர் சோராப்ஜி ஷப்பூர்ஜி—ஆகிய இந்த கனவான்கள் போதகர்கள். இந்த கலாசாலையை ஸ்தாபிக்கும் விஷயத்திலும் மேலே சொன்ன எற்பாடுகள் செய்யப்படும் விஷயத்திலும் மிஸ்டர் K. S. அய்யர் எடுத்துக் கொண்ட பிரயாசையை கவர்ன்மெண்டார் நன்குணர்ந்திருக்கிறார்கள்.

பர்மா ஆயில் கம்பெனி

முதல் பாத்திதையுடை பங்குதார்களுக்கு பங்கு ஒன்றுக்கு 7 ஷில்லிங்—5 பென்சு, இரண்டாவது பாத்திதையுடைய பங்குதார்களுக்கு பங்கு ஒன்றுக்கு 6 ஷில்லிங், சாதாரணப் பங்குகளுக்கு பங்குஒன்றுக்கு 1 ஷில்லிங் 6 பென்ஸ் மேனிக்கும் லாபம் பட்வாடா செய்யும் படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

அம்ரிட்ஸர் பாங்க்.

அமரிட்சர் பாங்கின் பேரில் எற்பட்டிருந்த ஒரு டிக்ரித் தொகைக்காக லாகூர் ஜில்லா ஜட்ஜியின் உத்திரவின் பேரில் ஷெ பாங்க் நாஜரால் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. இருப்புத் தொகையையும் புஸ்தகங்களும் கோர்ட்டிற்கு எடுத்துக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. பாங்க்கை கோர்ட்டார் மூடி முத்திரைபோட்டிருக்கிறார்கள். இதே மாதிரியாக ஜப்தி செய்யும் படியாக இந்த பாங்கின் கிளைகள் எந்த எந்த ஊரிலிருக்கிறதோ அந்தஊர் அதிகாரிகளுக்குத் தந்தி அனுப்பப்பட்டிருக்கிறது. டிக்ரியை நிறைவேற்றினது ஒரு புறமிருக்க பாங்கினை முடிவுக்குக் கொண்டுவந்து விடும்படி சில பங்குதார்கள் கோர்ட்டில் மனு செய்து கொண்டிருக்கிறார்கள்.

பாம்பே பாங்க்.

லாகூர் பீபில்ஸ் பாங்கும், அம்ரிட்சர் பாங்கும் அதன் அதன் கிளைகளுடன் முறிந்துபோயிருப்பதால் பம்பாய் காராச்சி முதலிய விடங்களில் கனத்த பணக்கசாலா உண்டாயிருக்கிறது. இதனால் பாம்பே பாங்கில் வட்டி எறவேண்டியதிருக்க 100 க்கு வருடத்திற்கு 6 வட்டியிலிருந்து 5 வட்டிக்குக் குறைந்திருக்கிறது. காரணம் விசாரிக்கின் இந்தியா கவர்ன்மெண்டார் இந்த சமயத்தில் பாம்பே பாங்கிக்கு $4\frac{1}{2}$ கோடி ரூபாய் கடன் கொடுத்து உதவியிருக்கிறார்கள் என்று கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை கூறுகின்றது.

வாழை மரம்.

வாழைமரத்தின் சத்து தேள்விஷத்திற்கும் பாம்பு விஷத்திற்கும் வைரியாக எண்ணப்படுகிறது. மேலேயும் தடவலாம், உள்ளுக்கும் கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

மீன்பிடிக்கும் தொழில்.

மீன்பிடிக்கும் தொழிலை மிகவும் ஆதரிக்க வேண்டுமென்று திருவாங்கூர் தர்பார் தீர்மானித்து இத் தொழிலை சர் பிரடிக் நிக்கல்சனுடைய பார்வையில் கற்றுக் கொண்டுவர ஒரு ஆபீசரை அனுப்பப் போகிறார்கள்.

ஸ்டீமர் "டுவின்கான்" எரிந்துபோய் விட்டது.

பெட்ரோலியம் எண்ணெய் ஏற்றிக்கொண்டு தூத்துக்குடிக்குப் போன "டுவின்கான்" என்னும் ஸ்டீமர் தூத்துக்குடி துறைமுகத்தில் 5—11—1913 ல் தீ பிடித்து எரிந்து போய்விட்டது. சீப் இன்ஜினீர் இரண்டாவது இன்ஜினீர், காப்டினுடைய பெண் சிசு, ஆயாள், இரண்டு வேலைக் காரர்கள்—ஆகிய இவர்கள் எல்லாம் தீக்குப் பயந்து சமுத்திரத்தில் விழுந்து இறந்தனர்கள். அங்கிருந்த பெட்ரோலியம் எண்ணெய் பர்மா ஆயில் கம்பெனியாரைச் சேர்ந்தது. ஸ்டீமரும் ஷை கம்பேனியாருக்குச் சொந்தம். போர்ட் ஆபீசாருடைய குமாரனும் மாண்டு போயினன். பர்மா ஆயில் கம்பெனிக்கு 2 லக்ஷம் ரூபாய் நஷ்டம் என்றும் அறிகிறோம்.

சணல் தீ பிடித்தது.

கல்கத்தாவில் சணல் சேர்த்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய கொட்டகை 5-11-1913-ல் தீப்பிடித்து எரிந்துபோய் விட்டது. நெருப்பவிக்கும் இன்ஜின்கள் வந்தன. அதற்குள் சரக்குகள் ஜாடாவிற்கு எரிந்துபோய்விட்டன. தீ அக்கம் பக்கத்தில் தாவாதபடி இந்த இன்ஜின்களைக் கொண்டு முயற்சி செய்யப்பட்டன.

"சிட்டி ஆப் பாரிஸ்."

சிட்டி ஆப்பாரிஸ் (City of Paris) என்பது ஒரு ஸ்டீமருடைய பெயர். இது லண்டன் நகரை விட்டுப் புறப்பட்டுச் சென்னை துறை முகத்திற்கு நிகழ் மீ 10வ திங்கள்கிழமை வந்து சேர்ந்தது; அன்று சமுத்திரம் கொந்தளிப்பா யிருந்ததாலும் மழை அதிகமாகப் பொழிந்துகொண்டிருந்த படியாலும் துறைமுகத்திற்குள் வந்து பிரயாணிகளையும் சரக்குகளையும் இறக்காமல் இரண்டு மணிநேரம் வரையில் துறைமுகத்திற்கு வெளியே நின்றுவிட்டு கல்கத்தாவிற்குப் பிரயாணமாய் விட்டது. இதில் சென்னையில் இறங்க வேண்டிய அனேக துரைமார்களும் துரைசாணிகளும் குழந்தைகளும் ஆயாக்களு மிருந்தார்கள். இந்த ஸ்டீமருக்கு மெசர்ஸ் பெஸ்ட் கம்பெனியார் ஏஜண்டுகள். இவர்களை விசாரித்ததைக் கொண்டு சென்னை துறைமுகத்தில் இறங்கவேண்டிய பிரயாணிகள் கல்கத்தாவிற்குக் கொண்டுபோகப்பட்டு ஸ்டீமர் கம்பேனியாரின் செலவில் கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு ரெயிலில் அனுப்பப் படுவார்கள். என்று அறிகிறோம்.

நீலி.

நீலி இதற்கு முந்தி இந்தியாவில் வெகு மும்முரமாய் பயிர் செய்யப்பட்டு வந்தது. விசேஷ ஏற்றுமதியும் செய்யப்பட்டு வந்தது. அன்னிய தேசத்தார் இதை வாங்கிச் சாயம் போடுவதற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு வந்தார்கள். ஆனால் ஜெர்மனியில் ரசாயனமுறையாக நீலிப்ருந்துகண்டுபிடிக்கப்படவே மேல்நாட்டார் அதை வாங்கத்தலைப்பட்டனர் இந்திய நீலிப்பயிர்க்கு க்ஷீணம் வந்துவிட்டது. ஆனால் இப்போது பெட்போர்டிலிருக்கும் மிஸ்டர் அலக்சாண்டர் W. பிளேயின் என்கிற சாயக்காரர் ரசாயன முறைப்படி செய்யப்பட்ட நீலியையும் உண்மையான நீலியையும் சோதனை செய்து பயிரங்கமாகக் காண்பித்தார். ரசாயன முறையிலே செய்யப்பட்ட நீலியில் சாயச் சரக்கு 100-க்கு 100 யிருக்கிறது. உண்மையான நீலியில் சாயச் சரக்கு (Indigotin) 100-க்கு 60 தானிருக்கிறது. இப்படி யிருந்தபோதிலும் இயற்கையான நீலியிலிருக்கும் சாயச் சத்து மிக பலமானதாயும் சுத்தமானதாயு மிருக்கிறது. என்று இயற்கையான நீலியைக்கொண்டு சாயம்போடப்பட்ட நூல் அணுவைச் சோதனை செய்து கண்டுபிடித்து பயிரங்கப்படுத்தி யிருக்கிறார்.

கற்பூரம்.

ஜப்பானும் போர்மோசாவுமாகச் சேர்ந்து வருஷத்திற்கு 66 லக்ஷம் ராத்தல் கற்பூரம் உலகத்திற்கு சப்ளை செய்கின்றன. உலக முழுதிலும் உற்பத்தியாகும் கற்பூரத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால் சுமார் கோடியே 20 லக்ஷம் ராத்தல் உற்பத்தியாகின்றது. ஆகவே உலகத்தில் உற்பத்தியாகும் கற்பூரத்தில் பாதி ஜப்பான் சப்ளை செய்கிறதென்று தெரிய வருகிறது.

"போர்மோசா" 6 லக்ஷம் ராத்தல் கொடுக்கின்றது. "குக்ஷிக்கும்" "கையூக்ஷிவும்" 20 லக்ஷம் ராத்தல் சப்ளை செய்கின்றன. இப்படி ஜப்பான் கவர்ன்மெ

ண்டு ஏகாங்கியாய் கற்பூர வியாபாரத்தை அனுபவித்துக்கொண்டு வருவது ஜப்பானுடன் போட்டிபோட விரும்பும் மற்ற தேசத்தவர்கள் ரசாயன முறைப்படி கற்பூரம் உற்பத்தி செய்ய தூண்டிக்கொண்டிருக்கிறது. சீனுவில் 13 லக்ஷம் ராத்தல்தான் உற்பத்தியாகின்றது. இது ஒரு பெரிதல்ல? சீனுத்தொழில்இன்னும் தொட்டிலில் தானிருக்கிறது. ஆனல் காட்டை இன்னும் பந்தோபஸ்தாய் காப்பாற்றி உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டு மென்று யோஜனை செய்யப்பட்டு வருகிறது. போர்னியோவிலும் சுமாட்ராவிலும் ஜப்பானுடன் போட்டி போட பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனல் இத்தேசத்து மரங்கள் உத்தேசிக்கப்பட்ட பலனைக் கொடுக்க இன்னும் அநேக வருஷங்கள் செல்லும்.

மெசர்ஸ் ஆல்பிரட் எங் கம்பேனி.

மெசர்ஸ் ஆல்பிரட் எங் அண்டு கோ என்பவர்கள் சென்னையில் ஒரு பெரிய வர்த்தக கம்பேனியார் இவர்களுக்கு லண்டனில் எட் ஆபீசிருப்பதுமன்றி மான்ச்சஸ்டரிலும்ஒருகிளையாபீசுமிருக்கிறது. தோல் வியாபாரமும் சீமை ஜவுளி வியாபாரமும் முக்கியமாய்ச் செய்து வருகிருர்கள். இப்போது இந்த கம்பெனியை லிமிடெட் "கம்பெனியாகச் செய்து இந்தியன் கம்பெனி ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்திருக்கிருர்கள்.

தீ விபத்து! ரூபா 3-லக்ஷம் நஷ்டம்.

பம்பாயில் ஈவார்ட் லாதாம் அண்டுகோ (Messrs. Ewart Latham & Co.) என்னும் வர்த்தகர்களுடைய மூன்று மெத்தை அமைந்த பாரிக்கட்டடம் தீப்பிடித்து எரிந்து போய்விட்டது. நெருப்பவிக்கும் இன்ஜின்கள் வரும் முந்தி தணலாய்ப்போய்விட்டது. கம்பெனியின் கிட்டங்கியில் (Godown) தந்தமும் சீமை ஜவுளியு மிருந்தனவாம். இவைகள் எல்லாம் சேதப்பட்டுப் போய்விட்டன. ஆனல் கிட்டங்கியிலிருந்த சாமானுக்கு நெருப்பு இன்சூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. நஷ்டம் மூன்று லக்ஷம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல்உயிர்ச்சேதம்இல்லை மெத்தைமேல் வசித்துக்கொண்டுவந்த உதவி மானேஜர் மிஸ்டர் வெப்ஸ்டர்தாம் உடுத்தியிருந்த படுக்கை உடுப்புடன் தப்பிக்கட்டடத்திற்குவெளியே ஓடிவந்துவிட்டார்.

COMMERCIAL CASES IN COURT.

வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

சென்னை சேஷன்கோர்ட் ஜட்ஜி சீப் ஜஸ்டிஸ்.

THE NATIONAL BANK CASE.
நேஷனல் பாங்க் கேஸ்.

குற்றவாளிகள (1) G.V கோதண்டராமசெட்டி.
(2) சீனிவாசாச்சாரி.

கேசின் விபரம்:—சென்னைப்பட்டணம்கிடங்குத் தெருவில் சீமை ஜவுளி வியாபாரம் செய்யும் மெசர்ஸ் அப்தல்ரகீம். அண்டு கோவில் முதல் குற்றவாளி, பாகஸ்தர்; இரண்டாவது குற்றவாளி நேஷனல் பாங்க் பில்கலெக்டர். முதல் குற்றம்:—மெஸர்ஸ் பி. பிப்பு சாயப்பு அண்டு கோ என்பவர்கள் மெசர்ஸ் T. அப்தல் கரீம் சாகேப் அண்டு கோ என்பவர்களுக்கு4-1-1912-ல்ரூபா 950-7-3க்கு எழுதிக்கொடுத்ததுபோல சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஆண்டி மாண்டு நோட்டு உண்மையான நோட்டல்லவென்றும் சிருஷ்டி நோட்டென்றும் உங்களுக்குத் தெரிந்திருந்தும் அது உண்மையான நோட்டைப்போல மொசடியாயும் அயோக்கிய தன்மையாயும் அப்தல்கரீம் என்பவர் உபயோகிக்கும்படியாக நீங்கள் அவருக்கு உளவா யிருந்திருக்கிறீர்கள் 4-1-1912-ல் நடந்த இந்த ஒக்குமத்தை முன்னிட்டு அப்தல்கரீம் அந்த நோட்டைஅயோக்கியத்தனமாயும்மோசக்கருத்தாயும் பிரயோகப்படுத்தின குற்றத்தைச் செய்திருக்கிருன். ஆகவே நீங்கள் இ. பி. கோ. 109, 420 பிரிவுகளின்படி தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தைச் செய்திருக்கிறீர்கள்.

இரண்டாவது குற்றம்:—மேலே கண்ட ஆண்டி மாண்டு நோட்டு உண்மையானதல்ல வேன்று உங்க

ளுக்குத் தெரிந்திருந்தும் அது உண்மையான நோட்டு என்று நேஷனல் பாங்கியார் நம்பும்படியாகச் செய்து அந்த நோட்டை அப்தல்கரீம் டிஸ்கவுண்ட் செய்யும்படியாக மோசடியாய்த் தூண்டி யிருக்கிறீர்கள். இந்த ஒக்குமத்தை முன்னிட்டு அப்தல்கரீம் ஏமாற்றின குற்றத்தைச் செய்திருக்கிறான். மூன்றாவது குற்றம்:—ஹாஜி சையத் உசேன் சாயப்பு அண்டு கோ என்பவர்கள் மெசர்ஸ் T. அப்தல்கரீம் சாயப்பு அண்டுகோ என்பவர்களுக்கு ரூபா 683-1-4 க்கு 11-1-1912-ல் எழுதிக்கொடுத்தது போல சிருஷ்டி செய்யப்பட்ட ஒரு ஆண்டிமாண்டு நோட்டை உண்மையான நோட்டுபோல அயோக்கியத் தனமாயும் மோசடியாயும் உபயோகப்படுத்தும்படி நீங்கள் ஒக்குமத்தா யிருந்ததை முன்னிட்டு அப்தல்கரீம் அப்படியே உபயோகப்படுத்தி குற்றத்தைச் செய்திருக்கிறான். ஆகவே நீங்கள் இ. பி. கோ. 109, 471—வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களைச் செய்திருக்கிறீர்கள்.

ஜூரர்சள்.—மெசர்ஸ் G. வெங்கட்ரெங்காராவ் (போர்மேன்) V. S. ராஜகோபாலாச்சாரியார், A. P. சைமாண்ட்ஸ், N. N. பாட்ஜட், S. பாஷியக்காரலு அய்யா, J. C. ரோலோ, O. கந்தசாமி செட்டி, E. நியூஹான்ஸ், J. E. பாட்டிலாயா.

லாயர்கள்.—மெசர்ஸ் கிங் அண்டு பாட்ரிட்ஜ் உதவியுடன் மிஸ்டர் W. பார்ட்டன் மிஸ்டர் E. R ஆஸ்பர்னுடன் பாரிஸ்டர் மிஸ்டர் T. ஆடம் பிராசிக்கியூஷன் தரப்பிற்கு ஆஜரானார்.

முதல் குற்றவாளிக்கு பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டும் இரண்டாவது குற்றவாளிக்கு மிஸ்டர் R. சடகோபாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் பார்ட்டன் கேசைப்பற்றி ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னது.—

முதல் குற்றவாளி சீமை ஜவுளி வியாபாரிகளாகிய மெசர்ஸ் T. அப்தல்கரீம்சாயப்பு அண்டுகோவில் முக்கியமான பாகஸ்தர்; இந்த கம்பெனியார் பெரியவியாபாரம் செய்துவந்தார்கள் லக்ஷ ரூபாய் வரையில் பாங்கியில் பிராம்சரி நோட்டின் பேரில் கடன் வாங்கும் படியான யோக்கிதையும் அந்தஸ்தும் உடையவர்கள் பத்து வரவுகாரர்களுக்கு வாய்தா காலத்தில் நோட்டீஸ் கொடுத்து அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்வது இரண்டாவது குற்றவாளியின் கடமை. 1912 மார்ச்சு மாதத்தில் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. அது முதல் அப்தல்கரீம் என்பவர் மறைந்துகொண்டிருக்கிறார் 1911 ஜூன் மாதத்தில் அப்தல் கரீம் கம்பெனிக்கு அதிகப்படி கடன் பாங்கியில் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. ஆகவே அதைக் குறைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். முதல் குற்றவாளியின் கோரிக்கையின்பேரில் அக்டோபர்மீ வரையில் வாயுதாகொடுக்கப்பட்டது நவம்பர் மாதத்தில் சீமையிலிருந்து அவர்களுடைய சீமை ஏஜண்டுவந்தார். அவருடைய கோரிக்கையின் பேரில் 1912 ஜனவரிமீ வரையில் வாய்தாகொடுக்கப்பட்டது. நிற்க, மிஸ்டர் மன்ரோ டிஸ்கவுண்ட் செய்யப்படும் புரோ நோட்டுகள் புதிப்பிக்கப்படும் புரோநோட்டுகள் என்று சந்தேகப்பட்டு முதல் குற்றவாளியைக் கேட்டார் அவர் ஆம் என்று தாமதமாய்ச் சொன்னார் அதன்பேரில் ஆசாமிகளிடமிருந்துநோட்டுகளுக்குப்பணம் நேரே வாங்கிக்கொள்ளுகிறதுதானே என்று சொல்ல, முதல் குற்றவாளி, அப்படிச் செய்தால் பஜாரில் தம்முடைய நாணயம் கெட்டுப்போகும் என்று சொன்னார் இதன் பிறகு பாங்கியார் டிஸ்கவுண்டுசெய்யப்பட்ட அண்டிமாண்டு நோட்டுகளில் கண்ட பேர்வழிகளுக்கு நேரே நோட்டீஸ் அனுப்பினார்கள். மோசடி வெளிவந்தது.

பிராசிக்கியூஷன் தரப்பு
சாக்ஷிகளின் விசாரணை.

முகம்மது உசேன் சாயப்பு:—நான்திப்பு சாயப்பு கம்பேனியில் பாகஸ்தன் அப்தல் கரீம் கம்பேனியுடன் எங்களுக்கு பத்து வரவு உண்டு. அவர்களுடன் கடைசி பத்துவரவு 4—10—1909. எனக்கு காண்பிக்கப்படும் புரோட்டு என்னுடைய கம்பேனியால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல; என்னுடையகம்பெனியால் எழுதிக் கொடுக்கப் பட்டதுபோல பார்வைக்கு தோற்றுகிறது. ஆனால் கையெழுத்தைப் பார்த்தால் என்னுடைய கம்பெனியால் எழுதிக் கொடுக்கப் பட்டதல்ல. இப்போது என்கையில் கொடுக்கப் பட்டிருக்கும் புரோ நோட்டுகள் என்னுடைய கம்பேனியால் எழுதிக்கொடுக்கப்பட்டவையல்ல. இந்த நோட்டுகள் சம்பந்தமாக என்னுடைய கம்பேனிக்கு 1912 மார்சு மாதம் 12உ பாங்கியாரிட மிருந்து நோட்டீஸ்கள் வந்தன கம்பெனியால் எழுதிக் கொடுக்கப்பட வில்லை என்று பாங்கிக்கு பதில் எழுதப் பட்

டது. (ஜூரி கேள்விக்கு) முதல் குற்றவாளி அப்தல் கரீம் கம்பேனியின் பகஸ்தான் என்று எனக்குத் தெரியாது.

பச்சேப்பிள்ளை:—நான் திப்பு சாயப்பு கம்பேனியில் குமாஸ்தாவாக யிருக்கிறேன் (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்கு கேள்விகளுக்கு) ஆண்டிமாண்டு நோட்டுகள் சம்பந்தமாக எங்கள் கம்பேனிக்கு நேஷனல் பாங்கிலிருந்து நோட்டீஸ் வந்தது. லாயர் மூலியமாய் பதில் நோட்டீஸ் நாங்கள் அனுப்பினோம்.

ஹாஜி அப்தல் குடூஸ் சாகேப்:—ஹாஜி சாகேப் உசேன் சாகேப் கம்பெனியின் நான். பாகஸ்தன் இவர்கள் சீமை ஜவுளி வியாபாரம் கிடங்குத் தெருவில் செய்து வருகிறார்கள்? என்னைத் தவிர கம்பேனிக்கு இன்னும் மூன்று பாகஸ்தர் களிருக்கிறார்கள். மெசர்ஸ் T. A. டேய்லர் கம்பேனியோடு எங்களுக்கு பத்து வரவுண்டு; அவர்களுடன் செய்த அனேகபேரங்களுக்கு அவர்களுக்கு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறோம். மற்றவர்களுடன் எங்கள் கம்பேனி பேரம் செய்தால் ரொக்கம் கொடுக்கிறது வழக்கம். அப்தல் கரீம் கம்பெனிக்கு நாங்கள் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்ததே கிடையாது. இப்போது எனக்குக் காண்பிக்கப்படும் பிராமிசரி நோட்டுகள் எங்கள் கம்பேனியால் எழுதிக்கொடுக்கப் பட்டதல்ல. மேலும் இந்த நோட்டுகளில் கம்பேனியின் பெயரை கையெழுத்து செய்திருக்கிற பாகஸ்தனுடைய கையெழுத்தைக் காணோம்.

இப்போது காண்பிக்கப்படும் இந்த 5 பிராமிசரி நோட்டுகளும் என்னுடைய கம்பேனியில் எழுதிக் கொடுக்கப்பட்டவை யல்ல; 1911 நவம்பர் மீ 6 உ க்கு மேற்பட்டு எங்கள் கம்பேனிக்கும் அப்தல் கரீம் கம்பேனிக்கும் யாதொரு பத்து வரவு நடந்ததில்லை. (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்குக் கேள்விகளுக்கு) எங்களுடையகம்பேனிக்கும் நாஜருடீன் சாகேப் கம்பேனிக்கும் பத்து வரவுண்டு. நான் சென்னையை விட்டு வேளியே போயிருந்த போது, நேஷனல் பாங்கியார் அப்தல் கரீம் கம்பெனியோடும், நாஜருடீன் சாகேப் கம்பேனியோடும் பத்து வரவை நிறுத்திப் போட்டார்கள் என்று என்னுடைய பாகஸ்தர்கள் எனக்கு அறிவிக்க வில்லை. (இரண்டாவது குற்ற வாளியின் வக்கீல்குறுக்குக் கேள்விகளுக்கு) என்னுடையகம்பேனியில் அனே குமஸ்தாக்க ளிருக்கிறார்கள். ஆனால் இரண்டு குமஸ்தாக்கள் மட்டிலும் கம்பேனிக்கு வரும் லெட்டர்களையும் நோட்டீஸ்களையும் வாங்குவார்கள்.

வெங்கட்ராமய்யர்:—நான் ஹாஜி சையத் உசேன் சாகேப் கம்பெனியின் பாகஸ்தன். என்னுடைய கம்பேனியின் பாகஸ்தனுடைய கையெழுத்தை எனக்குத் தெரியும், பாகஸ்தர்கள் கம்பேனியின் பெயரை முதலில் எழுதி அதன் அடியில் அவர்களுடைய பெயரைக் கையெழுத்து செய்வார்கள்.

என்னுடைய கம்பெனிக்கும் மெசர்ஸ் டெய்லர் கம்பேனிக்கும், அப்தல் கரீம் கம்பேனிக்கும் பத்து வரவு உண்டு. பின்னல் செய்யப்பட்ட கம்பேனியுடன் செய்யும் பேரங்களுக்கு ரொக்கம் கொடுப்பது வழக்கம் எனக்குக் காண்பிக்கப்படும் புரோநோட்டுகளில் போடப்பட்டிருக்கும் கையெழுத்துக்கள் என்னுடைய கம்பேனியின் பாகஸ்தர்களுடையவை யல்ல ; அப்தல் கரீம் கம்பேனியுடன் செய்த கடைசி பேரம் 1911 நவம்பர் மீ 6 உ யதுதான். (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்குக் கேள்விகளுக்கு) பாகஸ்தர்கள் ஏதேனும் புரோநோட்டுகள் எழுதிக் கொடுத்தால் எனக்குத் தெரிய மாட்டாது. என்னுடைய கம்பேனியின் 1912-ம் வருஷத்திய கணக்கு புத்தகத்தை நான் இவ்விடம் கொண்டுவர வில்லை. இந்த புரோநோட்டுகள் ஏன்கற்பனை செய்யப்பட்டு வரவேண்டுமென்பதற்கு எனக்குக் காரணம் தெரியவில்லை. நோட்டீஸ் வந்த பிறகுதான் நேஷனல் பாங்கி அப்தல்கரீம் சாகேப்பு கம்பேனியுடன் பத்து வரவை நிறுத்திப் போட்டார்கள் என்று எனக்குத் தெரியும். இந்த நோட்டீஸ் வர்த்தகர்களுக்குள் கனத்த கவலையை விளைவித்தது. (மிஸ்டர் R. சடகோபாச்சாரியார் குறுக்குக் கேள்விகளுக்கு) என்னுடைய கம்பேனிதாப்பில் நான் யாதொரு நோட்டீசையும் பெற்றுக்கொண்ட தில்லை, லெட்டர்கள், நோட்டீஸ்கள் வருவதை தாக்கல் செய்து கொள்வதற்கு நாங்கள் புஸ்தகம் வைக்கிறதில்லை. (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்குக் கேள்விக்கு) இந்த நோட்டுகள் ஏன் போர்ஜரி செய்யப்பட் டிருக்கின்றன என்பதற்குக் காரணம் சொல்லும்படியாக என்னுடைய கம்பேனி அப்தல் கரீம் கம்பேனிக்கு கடிதம் எழுதினதாக எனக்கு ஞாபக மில்லை.

அப்தல் சக்கூர்:—கிஜார் முகம்மது சாகேப் கம்பேனியில் நான் பாகஸ்தன், இந்தக் கம்பேனியில்

இன்னும் இரண்டு பாகஸ்தர்களிருக்கிறார்கள். என்னுடைய கம்பெனியின் பாகஸ்தர்களுடைய கையெழுத்து எனக்கு நன்றாய்த் தெரியும். இப்போது எனக்கு காண்பிக்கப்படும் புரோநோட்டு என்னுடைய கம்பெனியின் பாகஸ்தர்கள் எழுதிக் கொடுத்த நோட்டல்ல. என்னென்றால் பாகஸ்தர்களுடைய கையெழுத்து மாதிரியாக அவைகளில்லை. மேலும் கம்பெனியின் பெயரும் அவைகளில் பிசகாக எழுதப்பட்டிருக்கின்றது. விலை தகரார் விஷயமாய் நான் அப்துல் கரீம் கம்பெனிக்குப் போனால் முதல் குற்றவாளிதான் ஆலோசனை செய்யப்படுவார்; அவர் தான் விலையைத் தீர்ப்பது வழக்கம். இரண்டாவது குற்றவாளியை எனக்குத் தெரியும். அவர் நேஷனல் பாங்கிக்காக கிடங்குத் தெருவில் பணம் வசூல் செய்வதுண்டு (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்குக் கேள்விகளுக்கு) நானும் என்னுடைய கூட்டாளிகளும் ஹிந்துஸ்தானியில் கையெழுத்து செய்வோம்.

நாஜரூடீன் சாகேப் கம்பெனி கிடங்குத் தெருவில் பெரிய கம்பெனியாக விருந்தபடியால் அந்த கம்பெனியுடன் எங்களுடைய கம்பெனிக்கு பத்துவரவிருந்திருக்கலாம். நஜரூடீன் சாகேப் கம்பெனிக்கு உதவி செய்யும்பொருட்டு அப்துல்கரீம் கம்பெனியிடமிருந்து பணம் வாங்காமல் அப்துல்கரீம் கம்பெனிக்கு எங்கள் கம்பெனி யாதொரு புரோ நோட்டும் எழுதிக் கொடுத்ததில்லை. என்ன காரணத்தை முன்னிட்டு இந்த நோட்டுகள் போர்ஜரி செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கு எனக்கு காரணம் தெரியவில்லை. என்னுடைய கிராமத்திலிருந்து நான் திரும்பிவந்தபோது இந்த மோசடியைப்பற்றி நான் கேள்விப்பட்டேன்: என்னுடைய கூட்டாளிகள் இந்த மோசடியைப்பற்றி கிராமத்திலிருக்கும் எனக்கு எழுதினார்களோ என்னமோ எனக்கு ஞாபகமில்லை. கிராமத்திலிருக்கும்போது இந்த மோசடியைப் பற்றிப் பாராபரிக்கையாய்க் கேள்விப்பட்டேன். பட்டணம் வந்தபிறகுதான் விபரம் தெரிந்தது. கூட்டாளிகளுக்குள் ஏதேனும் லெட்டர் எழுதப்பட்டால் முக்கியமான கடிதங்களுக்கு மட்டிலும் பிரஸ் காப்பி எடுத்துக் கொள்ளப்படும். (மிஸ்டர் சடகோபாச்சாரியார் கேள்விகளுக்கு) புரோ நோட்டுப் பணங்களை வசூல் செய்ய இரண்டாவது குற்றவாளியுடன் மற்ற பில்கலெக்டர்களும் வருவதுண்டு; வாயுதா நோட்டீஸ்கள் பில்கலெக்டர்கள்தான் கொண்டுவருவது வழக்கம் இரண்டாவது குற்றவாளியின் பெயரைத்தவிர மற்ற பில்கலெக்டர்களுடைய பெயர் எனக்குத் தெரியாது. வாயுதா நோட்டீஸ் பெற்றுக்கொண்டதற்கு ரசீது கொடுக்கிற வழக்கமில்லை. பைசல் செய்யப்பட்ட ஒவ்வொரு புரோ நோட்டிற்கும் ½ அணா பில் கலெக்டருக்குக் கொடுக்கிறது வழக்கம். இந்தப் பிரகாரம் கொடுத்துவிட்டு கணக்கு எழுதுவது வழக்கம்.

அப்தல்காதர் சாகேப்:—(புனர் விசாரணையில், அப்தல்கரீம கம்பெனிக்கு ஷாப்மதார் சாகேப் கம்பெனியில் எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புரோ நோட்டு உண்மையான நோட்டல்ல; ஷாப்மதார் சாகேப் கம்பெனிக்கும் அப்தல்கரீம் கம்பெனிக்கும் 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 11-ந் தேதியுடன் பத்து வரவு நின்று போய்விட்டது. (கணக்கைக் காட்டி ருஜிப்படுத்தினார், (மிஸ்டர் ரிச்மெண்டுகுறுக்குக் கேள்விகளுக்கு) புரோநோட்டுகளை பார்வையிட பாங்கிக்குப் போனபோது, பாங்கியார் அப்தல்கரீம் கம்பெனியுடன்கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திப்போட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. நாஜரூடீன் சாகேப் க பெனிக்காக ஷாப்மதார் சாகேப் கம்பெனியார் பணம் வாங்காமல் அப்தல்கரீம் கம்பெனிக்கு யாதொரு புரோ நோட்டையும் எழுதிக் கொடுத்ததில்லை.

W. ராஸ் மன்ரோ:—நான் சென்னை நேஷனல் பாங்கிற்கு மானேஜர். நாஜரூடீன் சாகேப் கம்பெனியையும் அப்தல்கரீம் சாகேப் கம்பெனியையும் எனக்குத் தெரியும். அப்தல்கரீம் சாகேப் கம்பெனியில் முதல்குற்றவாளி கூட்டாளி. அப்தல்கரீம் சாகேப்கம்பெனி ஸ்தாபிக்கப்படுவதற்கு முந்தி நாஜரூடீன் சாகேப் கம்பெனியில் அப்தல்கரீம் கூட்டாளியாகவிருந்தனர். சரக்கை டெலிவர் செய்துகொள்ளும் பொருட்டு புரோ நோட்டுகளை டிஸ்கவுன்ட்டு செய்யும் பொருட்டு முதல் குற்றவாளி அப்தல்கரீம் கம்பெனியில் பாகஸ்தனுயில்லை என்று எண்ணுவதற்கு எனக்கு யாதொரு காரணமுமில்லை. இரண்டாவது குற்றவாளி பாங்க் எட் பில்கலெக்ட்டர். மாதம் 48 ரூ. சம்பளம். மறைந்துகொண்டிருக்கும் அப்தல்கரீமும் 1-வது குற்றவாளியும் டிஸ்கவுன்ட்செய்யப்பட அனுப்பும் புரோட்டுகள் அடக்கம் செய்யப்பட்ட கடிதங்களில்கம்பெனிக்காக கையெழுத்து செய்வதுண்டு.

6—11—1913.

பாரிஸ்டர் ரிச்மெண்டு தேக அசௌகரியத்தை முன்னிட்டு கோர்ட்டிற்குவாராததால் நேஷனல் பாங் மானேஜருடைய கிராஸ் விசாரணை நிறுத்திவைக்கப் பட்டது.

R. சாமிநாத அய்யர்:—நான் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு கிளார்க் (சில தஸ்தாவேஜ் களை ஆஜர் படுத்தினர்.)

T. S. ராஜகோபாலய்யர்:—ஐக்கோர்ட்டு வக்கில்; முதல் குற்றவாளி அப்தல் கரீம் கம்பெனி தரப்பில் சந்திரம் செட்டி என்பவர் பேரில் போலிஸ்கோர்ட்டில் கிரிமினல் நடவடிக்கை நடத்தினர். அப்போதுதான் அப்தல்கரீம் கம்பெனியில் பாகஸ்தராயிருப்பதாகச் சொன்னர் (கிராஸ் விசாரணை செய்யப்படவில்லை)

G. கோபால கிருஷ்ண செட்டி.—நான் அப்தல் கரீம் சாகேப் கம்பெனியில் லெட்ஜர் கீப்பர். கம்பெனியைச் சேர்ந்த எல்லா வேலைகளையும் முதல் குற்றவாளியே நடத்திவந்தார். முக்கியமான விஷயங்களில் முதல் குற்றவாளியிடமிருந்துதான் நான் உத்திரவு வாங்குகிற வழக்கம் கம்பெனியின் கணக்குப் புத்தகங்கள் எல்லாம் முதல் குற்றவாளி வசம் தானிருந்தன. காஷ்க்கீப்பர் பாஷ்யம் நாயுடு அசல் (Rough) காஷ் புஸ்தகம் வைத்திருந்தார். நான் லெட்ஜர் வைத்திருந்தேன். அதிலிருந்து பதிவேன். (எந்தெந்த கம்பெனிகளுடன் பத்துவர வுண்டென்பதைப்பற்றியும பாங்கிக்கு டிஸ்கவுண்ட் செய்வதற்காக அனுப்பப்பட்ட புரோனோட்டுகளையும் லெட்ஜரில் காண்பித்தார்.) முதல் குற்றவாளி மாதம் ரூ. 200 அலவன்ஸ் வாங்கிக்கொள்ளுவார். உண்மையில் மாதம் மாதம் ரூ. 50 எடுத்துக்கொண்டு வந்தார். வருஷக் கடைசியில் ரூ. 600 அவர் பேரில் பத்து எழுதி யிருக்கிறது. இது எதற்காக கொடுக்கப்பட்டதென்று எனக்குத் தெரியவில்லை. அப்தல்கரீம் கம்பெனி இன்ஸால்வெண்டாய்ப் போய்விட்டவுடன் அபிஷியல் அசயினி எல்லா கணக்கு புஸ்தகங்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

சிற்றுண்டிக்காக கோர்ட்டு கலைந்தது மறுபடியும் கோர்ட்டு கூடினவுடன் இப்போது எனக்குக் காண்பிக்கப்படும் புரோனோட்டுகள் சிலவை காஷ்கீப்பர் பாஷியம் நாயுடுவால் எழுதப்பட்டிருக்கிறது. சிலவை விஜய ராகவலு நாயுடுவால் எழுதப்பட்டிருக்கிறது சில கடிதங்கள் கிளார்க் விஜயராகவலு நாயுடுவால் எழுதப்பட்டு முதல் குற்றவாளியால் கையெழுத்து செய்யப்பட்டிருக்கின்றன. (1912-ம் வருஷம் மார்ச்சு மாதம் வரையில் முதல் குற்றவாளி வியாபாரத்தை நடத்திவந்தார் என்பதை ருஜுப்படுத்தும பொருட்டு இந்த லெட்டர்கள் தாக்கல் செய்யப் படுகின்றன என்று மிஸ்டர் ஆஸ்பர்ன் சொன்னர்.

மிஸ்டர் சடகோபாச்சாரியார் குறுக்குக் கேள்விகளுக்கு) நேஷனல்பாங் டிஸ்கவுண்ட்கிளார்க் எனக்கு சாதாரண அறிமுகம். அப்தல் கரீம் கம்பெனியில் குமாஸ்தாவாகவிருந்த சேஷய்யாவின் மைத்துனன்; அப்தல் கரீகம் கம்பெனியில் குமாஸ்தாவாக விருந்த போதிலும் நாஜருடன் கம்பெனியின் வேலையை அவர் பார்ப்பதுண்டு. இவர் அடிக்கடி அப்தல் கரீம் கம்பெனிக்குவந்து காஷியரிடம் பேசுவதுண்டு. இரண்டாவது குற்றவாளி அப்தல் கரீம் கம்பெனியில் பணம் வசூல் செய்ததை நான் பார்த்ததில்லை. நேஷனல் பாங் வேலைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் அப்தல் கரீம் பொங்கல் இனும் கொடுக்கிறதுண்டு. என் கம்பெனியின் சிப்பந்திகளுக்கு என் கம்பெனி இனும் கொடுக்கிறதில்லை. 1910 முடிவு வரையில் தருமச் செலவு விபரமாய் எழுதப்படவில்லை. பாங்கி உத்தியோகஸ்தர்களுக்கு என் முதலாளிகள் தாராளமாக தருமம் செய்துவந்தார்கள் என்பதற்கு எனக்கு காரணம் தெரியாது. என்னுடைய கம்பெனிக்கு மதராஸ் பாங்கியுடனும் நேஷனல் பாங்கியுடன் மட்டிலும் கொடுக்கல் வாங்கல் உண்டு. மற்ற கம்பெனிகளுடன் இல்லை.

துரைசாமி சாஸ்திரி.—நான் ஆக்டிங் ரெக்கார்ட் கீப்பர் 1910ல்18ம் நெ. அசல்வியாஜ்ஜியத்தில் முதல் குற்றவாளியால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு பிரமாண வாக்குமூலத்தை ஆஜர் படுத்தினர்.)

இந்தப்பிரமாணப் பத்திரம் முதல் குற்றவாளி அப்தல்கரீம் கம்பெனியில் பாகஸதராயிருந்தார் என்பதை ருஜுப்படுத்துகின்றது.

T.G.பொம்பாஸ்:-நான்நேஷனல்பாங்கியின் அஸிஸ்டெண்ட் புரோனோட்டு எழுதிக்கொடுத்தவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதுண்டு. புரோனோட்டை என்

டார்ஸ் செய்து பாங்கிக்கு அனுப்பியவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவது வழக்கமில்லை. நோட்டீஸ்கள் டிஸ்கவுன்ட் கிளர்க்கால் தயார் செய்யப்படும். அவை சரிபார்க்கப்பட்டபின்பு எட் பில்கலெக்ட்டருக்கு அனுப்பப்படுவதுண்டு. அவரிடம் 5 உதவி பில்கலெக்ட்டர்களிருக்கிறார்கள். இவர்கள் மூலியமாக அவைகள் ஆசாமிகளுக்குப் பட்வாடா செய்யப்படும்.

7—11—1913.

இன்றுகாலை 11-மணிக்கு கோர்ட்டு கூடினவுடன் நேஷனல் பாங்க் அசிஸ்ட்டன்ட் மிஸ்டர் பொம்பாஸ் மிஸ்டர் சடகோபாச்சாரியாரால் கிராஸ் செய்யப்பட்டார்.

மிஸ்டர் பொம்பாஸ்: நேஷனல் பாங்க் அகவுன்ட் டிபார்ட்டுமெண்டில் 1912-வருஷம் ஜனவரி மாசத்தில் சேர்ந்தேன். அப்தல்கரீமுக்கு நோட்டீஸ்கள் அனுப்பியதைப்பற்றி பொதுவாய் இரண்டாவது குற்றவாளியை நான் கேட்டேன். நான் இரண்டாவது குற்றவாளியைக் கேட்பதற்கு முந்தி, கம்பெனிகள் வாயுதா நோட்டீஸ்கள் பெற்றதை மறுதளித்தது எனக்குத் தெரியமாட்டாது. இதுவிஷயமாக இரண்டாவது குற்றவாளியைக் கேட்கும்படி மிஸ்டர் மன்ரோ எனக்குச் சொன்னார். இது மார்ச்சுமீ 18உ அதாவது இரண்டாவது குற்றவாளி உத்தியோகத்தைவிட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்ட தினம். வாயுதா நோட்டீஸ்கள் பில் கலெக்ட்டர்களிடம் டெலிவர் செய்யப்பட்டதற்கும், அவர்கள் ஆசாமிகளிடம் சார்வ் செய்ததையும் காண்பிக்கும்படியான ரிஜிஸ்டர் ஆபீசில் வைக்கிறதில்லை. இரண்டாவது குற்றவாளியிடம் நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டதை நான் நேரில் பார்க்கவில்லை. நோட்டீஸ்கள் இரண்டாவது குற்றவாளியிடம் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதற்கு நான் டிஸ்கவுன்ட் கிளர்க்கிடமிருந்து காரணமும் எழுதி வாங்கவில்லை. டிஸ்கவுன்ட் கிளர்க் ஜூலை மாசத்திலோ ஆகஸ்ட் மாதத்திலோ உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டான், (புனர் விசாரணையில்) 1912 எப்ரல் அல்லது மே மாசத்திலிருந்து காஷியர் வேலை செய்வதை நிறுத்திவிட்டார். டிஸ்கவுன்ட் கிளர்க்கிடமிருந்து காரணம் எழுதி வாங்கவில்லை. (ஜூரி கேள்விகளுக்கு) புரோநோட்டுகள் முதலில் என்னிடம்தான் வருகின்றன. பிறகுதான் டிஸ்கவுன்ட் கிளர்க்கிடம் போகும். புரோநோட்டுகளை எண்டார்ஸ் செய்தவர்களுடைய கையெழுத்தை நாங்கள் பரிசோதனை செய்வோம். புரோநோட்டு எழுதிக்கொடுத்தவர்களுடைய கையெழுத்தை நாங்கள் பரிசோதிக்கமாட்டோம். ஏன் என்றால் எங்களுக்கும் அவர்களுக்கும் லேவாதேவியில்லை.

நரசிம்மலு:—நான் நேஷனல் பாங்க் அட்டன்டர். இரண்டு வருடங்களுக்கு முந்தி அப்தல்கரீம் கம்பெனிக்கு 20 லெட்டர்கள் கொண்டுபோனேன். ஒரு லெட்டரை அப்தல்கரீம் கம்பெனிக்குக் கொடுத்துவிட்டு திரும்பிவரும்போது இரண்டாவது குற்றவாளிவந்து என் கையிலிருந்த பாக்கி சடிதங்களில் 4யை எடுத்துக்கொண்டார். நான் டெலிவரி புஸ்தகத்தை இரண்டாவது குற்றவாளியிடம் கொடுத்து கையெழுத்துப் போடச்சொன்னேன். இதன்பேரில் அவர் அந்தபுத்தகத்தை அப்தல்கரீம் கம்பெனி காஷியார் பாஷியம் நாயுடுவிடம் கொடுத்தார். இவர் அதில் கையெழுத்து செய்து டெலிவர் புத்தகத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்தார். (ஜூரி கேள்விகளுக்கு) இரண்டாவது குற்றவாளி 4 கடிதங்களை எடுத்துக்கொண்டதைப்பற்றி நான் என்னுடன் கூடவந்த அட்டன்டர் கிருஷ்ணய்யாவைத்தவிர வேறெவரிடமும் சொல்லவில்லை. இரண்டாவது குற்றவாளியும் நேஷனல் பாங்கியில் உத்தியோகம் பார்த்துவந்தபடியால் அது விஷயமாக எனக்கு யாதொரு சந்தேகமும் உண்டாகவில்லை.

கிருஷ்ணய்யா:—நான் நேஷனல் பாங் அட்டன்டர் சிலகாலத்திற்கு முந்தி டெலிவர் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட கடிதங்களில் நான்கை இரண்டாவது குற்றவாளி எடுத்துக்கொண்டதாக நரசிம்மலு என்னிடம் சொல்லியிருக்கிறான். (மிஸ்டர் சடகோபாச்சாரியார்குறுக்குக்கேள்விகளுக்கு) நரசிம்மலுவை அழைத்துக்கொண்டு வரும்படி இரண்டாவது குற்றவாளி எனக்கு உத்திரவு செய்தார். நான் அப்தல் கரீம் கம்பெனிக்குச் சென்று நரசிம்மலுவைக்கண்டு இரண்டாவது குற்றவாளி கூப்பிடுவதாகச் சொன்னேன். நரசிம்மலுவை என்ன காரணத்திற்குக் கூப்பிடுகிறார் என்பதாக இரண்டாவது குற்றவாளி என்னிடம் சொல்லவில்லை.

டி. ஜெயராம் நாயுடு:—நான் அப்தல் கரீம் கம்பெனியின் துபாஷ்; கம்பெனி 1912ல் முறிந்துபே

ய்விட்டது. அப்தல் கரீம் நாஜருடன் சாகேப் கம்பெனியிலும் பாகஸ்தராகவிருந்தார் சரக்குகள் விஷயமாக ஏதேனும் தகரார் உண்டானல் எப்போதும் முதல் குற்றவாளியுடன் நான் ஆலோஜனை செய்வதுண்டு. அவர்தான் கம்பெனியை மானேஜ்மெண்டு செய்யும் வகையில் முக்கியமானவர். முதல் குற்றவாளி ஆபீசுக்கு ஒழுங்காய் வருவார்; அப்தல்கரீம் மாதத்தில் நான்கு தினங்கள்தான் சென்னபட்டணத்திலிருப்பார். அப்போது ஆபீசுக்கு ஒழுங்காய் வருவார்; அப்தல்கரீம் ஊரில் இல்லாதபோது முதல் குற்றவாளி வசம்தான் ஆபீஸ் முழுதிலுமிருக்கும். பணசம்பந்தமான விஷயங்களும் வட்டி சம்பந்தமான விஷயங்களும் எப்போதும் முதல் குற்றவாளியுடன் தான் ஆலோசனை செய்யப்படும். கம்பெனியின் எல்லா கொடுக்கல் வாங்கல்களும் முதல் குற்றவாளியால்தான் நடத்தப்பட்டுவரும் சில பேரங்கள் புரோ நோட்டுகள் மூலமாய் நடத்தப்படும். திப்பு சாகேப் கம்பெனியை எனக்குத் தெரியும் கை ஜார் முகமத் அண்டு கோ, ஷாப்மதார் சாகேப் அண்டு கோ, சயத் உசேன் அண்டு கோ, திப்பு சாயப்பு கம்பெனி ஆகிய இந்த கம்பெனிக்காரர்களுக்கும் அப்தல்கரீம் கம்பெனி யாருக்கும் நான் கம்பெனியில் சேர்ந்த 1910ம் வருடமுதல் கொடுக்கல் வாங்கல் கிடையாது. எனக்குத் தெரிந்தவரையில் திப்பு சாகேப் கம்பெனியார் அப்தல்கரீம் கம்பெனியாருக்கு யாதொரு புரோ நோட்டையும் எழுதிக் கொடுத்ததில்லை. சையத் உசேன் எப்போதும் ரொக்கம் கொடுத்துக்கொண்டு வந்தார்கள்; புரோ நோட்டு எழுதிக் கொடுத்ததில்லை.

1910-ல் நான் சேர்ந்தது முதல் 1912 மார்ச்சில் கம்பெனி முடிவடையும் பரியந்தம் முதல் குற்றவாளியின் நிலைமையில் யாதொரு மாறுதல் உண்டாகவில்லை. (மிஸ்டர் சடகோபாச்சாரியார் கிராஸ் கேள்விகளுக்கு) வியாபார விஷயமாக இரண்டாவது குற்றவாளியுடன் நான் பேசுவதுண்டு. அப்தல் கரீம் கம்பெனியுடன் பேரம் செய்யும் வியாபாரிகள் தங்களுடைய பாக்கிகளை சில சமயம் பாங்கிலும் செலுத்துவார்கள் சில சமயம் கம்பெனியிலும் நேரில் செலுத்துவார்கள். பாங்கார் நோட்டீஸ்கள் சார்வு செய்வதைப் பற்றி வர்த்தகர்கள் புகார் செய்வார்கள். என் எனில் அது வழக்கமில்லை. (கோர்ட் சிற்றுண்டிக்காக கலைந்தது) கோர்ட்டு பிற்பகல் 3 மணிக்குக் கூடின வுடன்;

தாமோதரன் செட்டி:—சீமை ஜவுளி வியாபாரிகளாகிய மெசர்ஸ் V. முனுசாமி செட்டி கம்பேனியில் நான் கூட்டாளி; அப்தல் கரீம் கம்பேனியுடன் பத்து வரவு உண்டு. சில சரக்குகள் எடுத்துக் கொண்டோம். புரோ நோட்டுகள் எழுதிக் கொடுத்தோம். ஷெ நோட்டுகள் நேஷனல் பாங்கில் டிஸ்கவுண்டு செய்யப்பட்டன. பணம் பாங்கிலும் செலுத்தப்படுகிறதுண்டு. (குறுக்குக் கேள்விகளுக்கு) கம்பேனியில் பணம் செலுத்துவது லாபகரம்; என் என்றால் வட்டி ரிபேட்பணம் உடனே கிடைத்துப் போகும்.

பாக்கிப் பணம் கம்பேனியில் செலுத்தப் பட்ட பின்பு வாயுதா நோட்டீஸ் பாங்கியிலிருந்து வந்தால் அது கம்பேனிக்குத் திருப்பி அனுப்பப்படும். பாக்கி பணம் பில் கலெக்டர்இடம் செலுத்தப் பட்டால் ஒவ்வொரு நோட்டுக்கும் ஒவ்வொரு அணா வீதம் பில் கலெக்டருக்குக் கொடுக்கப்படும். பொங்கல் பண்டிகை சமயத்தில் நேஷனல் பாங்கியி லிருக்கும் பில் கலெக்டர் களுக்கும் மற்றவர் களுக்கும் வியாபாரிகள் இனும் கொடுப்பது வழக்கம். நானே அம்மாதிரி இனம்கள் இரண்டாவது குற்றவாளிக்குக் கொடுத்திருக்கிறேன். இரண்டாவது குற்றவாளியின் புத்திரன் உபநயனத்திற்காக 15 ரூபாய் ஆசீர்வாதம் செய்திருக்கிறேன்.

பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷி விசாரணை இத்துடன் முடிவு பெற்றது. ஆனால் பாரிஸ்டர் ரிச்மெண்டு நோயாக விருப்பது முன்னிட்டு சில சாக்ஷிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட வில்லை. கோர்ட்டு அடுத்த திங்கட்கிழமை வரையில் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் ராஸ்மன்ரோ :—(மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்கு விசாரணைக்கு) புரோநோட்டிற்காத் தொகை தீர்க்கப்பட்டு அப்தல்கரீம் கம்பெனி மூலியமாய் செலுத்தப்பட்டது. புரோநோட்டு எழுதிக் கொடுத்தவர்களுக்கு பிப்ரவரி௴ 10௳ லெட்டர் அனுப்பினேன். அப்தல்கரீம் கம்பெனி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டும் பாங்கியார் வசமிருக்கும்படியான சில நோட்டுகள்

சந்தேக முள்ளவைகளாக யிருக்கின்றன திப்பு சாயப்பு கம்பெனி ஹாஜிசாகேப் உசேன் கம்பெனி ஆகிய இந்த இரண்டு கம்பெனிக்காரர்களும் கிடங்குத்தெருவில் சீமை ஜவுளி வியாபாரம் செய்யும் முதல் நம்பர் வர்த்தகர்கள். இன்னும் இரண்டு கம்பெனிக்காரர்களுடைய புரோநோட்டுகள் பாங்கியார் வசமிருக்கின்றன. இந்த கம்பெனிகள் சிறிய கம்பெனிகள். பிப்ரவரி மீ 10வக்கு இரண்டொரு தினங்களுக்கு முந்தி நான் முதல் குற்றவாளியைக் கண்டு பேசினேன். புரோநோட்டுத் தொகைகள் அப்தல்கரீம் கம்பெனி நடைமுதல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. ஷை புரோநோட்டுகள் டிஸ்கவுன்ட்டு செய்யப்பட்ட பின்பு சரக்குகள் டெலிவர் செய்யப்பட்டன: (இவ்விடத்தில் அப்தல்கரீம் கம்பெனியின் நடைமுதல் கணக்கணக்கின் சர்டிபிக்கேட் செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டது) அப்தல்கரீம் கம்பெனியாரால் கையெழுத்து செய்யப்பட்ட அனேக செக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவைகள் எல்லாம் முதல் குற்றவாளியால் கையெழுத்து செய்யப்பட்டிருக்கின்றன:

கம்பெனி 1912 மார்ச்சில் இன்சால்வெண்டாய் போய்விட்டது. மெசர்ஸ் கன்னியா கம்பெனி கடன்காரர்களாக விருந்து நடவடிக்கை நடத்தினதின்பேரில். அப்தல்கரீம் கம்பெனியின் நிலைமை முதல் குற்றவாளிக்குத் தெரியும். பிப்ரவரி மாதத்தில் முதல் குற்றவாளி என்னைக் கண்டு G. V. செட்டி கம்பெனி, ரகிமான் சாகேப் கம்பெனி கடன்களை ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 10 ஆயிரத்துக்கு குறைத்துப் போடுவதாகவும் அதுவும் ஜூன்மீ முடிவுக்குள் குறைத்துப்போடுவதாகவும் சொன்னார். முதல் குற்றவாளியே இப்படி ஒப்புக் கொண்டார். அப்போது அப்தல் கரீம் இல்லை. வாயுதா நோட்டீஸ்கள் ஆசாமிகளுக்கு ஒழுங்காய் சார்வ்செய்கிறதில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு இரண்டாவது குற்றவாளி மார்ச்சுமீ 2உ டிஸ்மிஸ் செய்யப்பட்டார். மிஸ்டர் பாம்பசை விசாரிக்கும்படியாகச் சொன்னேன். அவருடைய ரிப்போர்ட்டின் பேரில் தான் இரண்டாவது குற்றவாளி டிஸ்மிஸ் செய்யப்பட்டார். இரண்டாவது குற்றவாளி யாதொரு சமாதானம் அல்லது காரணம் செல்லவில்லை. (உள்ளூர் புரோநோட் டிஸ்கவுன்ட் ரிஜிஸ்டரை ஆஜர்படுத்தி நோட்டுகள் டிஸ்கவுன்ட் செய்யப்பட்ட தேதிகளை எடுத்துக் காண்பித்தார்.

டிபனுக்காக கோர்ட்டுகலைந்தது. மறுபடியும் கூடினவுடன் மிஸ்டர் ராஸ் மன்ரோ மிஸ்டர் ஆஸ்பர்னால் விசாரணை செய்யப்பட்டார்.

மிஸ்டர் ராஸ் மன்ரோ:—சரக்குகள் டெலிவர் செய்யப் படுவதற்காக அப்தல் கரீம் கம்பெனியார் மார்ச்சு மாதத்தில் இரண்டே முறை அப்ளிக்கேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள். மற்ற அப்பளிக்கேஷன்களுக்கு ஆபிசில் தேடினேன். ஆனால் அகப்படவில்லை. மூன்று மூட்டைகள் டெலிவர் செய்யப்படுவதற்காக மார்ச்சுமீ 14உ அப்ளிக்கேஷன்கள் செய்து கொள்ளப் பட்டிருக்கின்றன. ஒன்று அப்தல் கரிமால் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறது மற்றவைகள் முதல் குற்றவாளியால் கையெழுத்து செய்யப்பட்டன, அப்ளிக்கேஷன்கள் அப்தல்கரிமால் செய்யப்பட்டாலும் சரி அல்லது முதல குற்றவாளியால் செய்யப்பட்டிருந்தாலும் சரி வித்தியாசம் எண்ணப் படுகிறதில்லை. ஹாஜி உசேன் சாகேப் அப்தல் கரீம் கம்பேனிக்கு எழுதிக் கொடுத்து பாங்கியால் 1911 ஜூலைமீ முதல் 1912 மார்ச்சுமீம் வரையில் டிஸ்கவுன்ட் செய்யப்பட்ட புரோ நோட்டுகளின் மொத்தத்தொ

கை ரூ. 87,872 திப்பு சாயப்பு எழுதிக் கொடுத்து பாங்கில் டிஸ்கவுன்ட் செய்யப்பட்ட புரோ நோட்டுகளின் மொத்தத் தொகை ரூ 88, 208. மதார் சாகேப் எழுதிக் கொடுத்த புரோ நோட்டுகளின் தொகை ரூ. 21,132 அப்தல் கரீம் கம்பேனிக்கு எழுதிக் கொடுக்கப் பட்டு பாங்கியில் 1912 ஜனவரிமீ முதல் அப்தல் கரீம் கம்பெனி இன்சால்வெண்டாகும் பரியந்தம் டிஸ் கவுன்ட் செய்யப்பட்ட புரோ நோட்டுகளின் மொத்தத் தொகை ரூ. 152, 272.

N B இத்துடன் அன்று கோர்ட்டுக் கலைந்தது.

11, and 12-11-1913.

மிஸடர் ராஸ்மன்ரோ:—அப்தல்கரீம் முதல் குற்றவாளியுடன் பாங்கிற்கு அபூர்வமாக வருவதுண்டு. 1911 ம் வருஷம் மார்ச்சு மாசம் 14ந் தேதி இரண்டு பிராமசரி நோட்டுகளை முதல் குற்றவாளியிடம் கொடுத்தேன். (மிஸ்டர் சடகோபாச் சாரியார் குறுக்குக் கேள்விகளுக்கு) இரண்டாவது குற்றவாளியாகிய சீனிவாசய்யங்கார் எப்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டார் என்பதைக் காண்பிக்க ஆபீசில் யாதொரு ரிக்கார்டுமில்லை; நான்கு கம்பெனிகளுக்கும் வாயுதா நோட்டீஸ் தயார் செய்வது டிஸ்கவுன்ட் கிளர்க்கினுடைய வேலை; யார் அந்த நோடீஸ்களைத் தயார் செய்தார்கள் என்று நான் விசாரணை செய்யவில்லை. இரண்டாவது குற்றவாளி சம்பந்தப்பட்ட வரையில் மிஸ்டர் பொம்பாஸ் ரிப்போர்ட் செய்ததின் பேரில் பிரியாது தாக்கல் செய்தேன். 1912 மார்ச்சுமீ 20உ இரண்டாவது குற்றவாளி சில கடிதங்களை கையாடினார் என்று நான் கீழ்க் கோர்ட்டில் சொன்னேன். இந்த சமாசாரம் மிஸ்டர் பொம்பாஸ் எனக்குச் சொன்னார். இரண்டாவது குற்றவாளி தன்னுடைய கடமையைச் செய்யத்தவறிப்போயிருக்கிறார் என்று பிரியாதில் நான் சொல்லவில்லை. புரோ நோட்டு எழுதிக்கொடுத்திருப்பவர்களைப் பற்றி மார்ச்சுமீ 20உக்கு முந்தி நான் சந்தேகப்படவில்லை. (மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்குக் கேள்விக்கு) நான்கு கம்பெனிகள் தரப்பில் அப்தல் கரீம் கம்பெனி யார் ரூ. 65,980 பெருமானமுள்ள புரோநோட்டுகளை டிஸ்கவுன்ட் செய்திருக்கிறார்கள். இந்தத் தொகையில் ரூ. 3070 நஜரூடின் சாகேப் கம்பெனி கணக்கிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. ரொக்கம் ரூபா 28,532 அப்தல்கரீம் சாகேப் கம்பெனியாரால் செலுத்தப்பட்டது. அப்தல் கரீம் கம்பேனியால் செலுத்தப்பட்ட தென்பதற்கு பாங்கி புஸ்தகங்களில் யாதொரு பதிவு மில்லை. ரூபா 36,574 புரோ நோட்டுகள் மூலமாய் செலுத்தப்பட்டன. (மிஸ்டர் பார்ட்டன் புனர் விசாரணைக்கு) பிரியாது கொடுத்த மூன்று நாட்களுக்குப் பிறகு நான் சந்தேகப்பட்டேன். காஷியர்பேரில் நான் நடவடிக்கை நடத்தவில்லை. ஏன் என்றால் அவர் சிக்கில் விழுந்து இறந்து போய்விட்டார். பாங்கியில் நடந்திருக்கும் மோசம் எனக்குத் தெரியவந்ததற்குப் பிறகு புரோநோட்டு எழுதிக் கொடுத்தவர்களுக்கெல்லாம் நான் நோட்டீஸ் அனுப்பினேன். இது மார்ச்சுமீ 28உ.

(இத்துடன் அன்று கோர்ட்டு கலைந்தது.)

13—11—1913

கோபால கிருஷ்ண செட்டி:—(மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்கு கேள்விகளுக்கு) நான் 1911 ஆரம்பத்தில் முதல் குற்றவாளியின் லெட்ஜரை எழுதினபோது "முதல்" என்கிற வார்த்தையை விட்டு விட்டு அதற்குப் பதில் "டிபாசிட்" என்று போட்டேன். இது முதல் குற்றவாளி அப்தல் கரீம் கம்பேனியில் கூட்டாளியாக விருக்கவில்லை என்பதை காண்பிக்கின்றது. அப்தல்கரீம் உத்திரவின்பேரில் லெட்ஜ

ரில் இப்படி எழுதினேன். (புனர் விசாரணைக்கு)பாஷியம் நாயுடுவும் கோவிந்தராஜலு நாயுடுவும் கம்பேனியில் பணம் டிபாசிட் செய்திருக்கிறார்கள். டிபாசிட் செய்யப்பட்ட தொகையின்பேரில் வருஷத்திற்கு 100-க்கு 12 வீதம் வட்டி கொடுக்கப்பட்டது. முதல் குற்றவாளி மாதம் ஒன்றுக்கு ரூ. 200 சம்பளமும் டிபாசிட் செய்யப்பட்ட தொகைக்காக ரூ. 50 வட்டியும் வாங்கிக் கொண்டு வந்தார். (ஜூரர்கள் கேள்விக்கு) வியாபாரத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கு அல்லது லாபத்தில் இன்ன பாகம் முதல் குற்றவாளியைச் சேர்ந்ததென்பதற்கு லெட்ஜரில் யாதொன்றுமில்லை. முதல் குற்றவாளி லாபத்திற்காக ஏதேனும் பணம் வாங்கிக்கொண்டு வந்தார் என்று சொல்வதற்கு கணக்குப் புத்தகங்களில் யாதொரு பதிவுகளுமில்லை.

ஜெயராம் நாயுடு:—(மிஸ்டர் ரிச்மெண்டு கிராஸ் கேள்விகளுக்கு)

14—11—1913

பாஷியம் நாயுடு, விஜயராகவலு என்பவர்கள் அப்தல் கரீம் கம்பேனியில் குமஸ்தாக்கள். இவர்கள் பிராசிக்கியூஷன் தரப்பிற்கு கீழ்க் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டார்கள். ஆனால் இந்த சேஷன் கோர்ட்டில் விசாரணை செய்யப்படவில்லை. ஆனதால் அது சட்ட விரோதமென்று மிஸ்டர் ரிச்மெண்டு ஆக்ஷேபித்தார். பிராசிக்கியூஷன் தரப்பிற்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் அந்த சாக்ஷிகளை சேஷன் கோர்ட்டில் விசாரணை செய்வதும் செய்யாததும் பிராசிக்கியூஷன் தரப்பார் இஷ்டத்தைப் பொருத்ததென்றும் கீழ்க் கோர்ட்டில் சாக்ஷி சொன்னவர்களை எல்லாம் சேஷன் கோர்ட்டில் கூப்பிட பிராசிக்கியூஷன் தரப்பார் கட்டுப்பட்டவர்களல்லவென்றும் பிரஸ்தாப இரண்டு சாக்ஷிகளும் சேஷன் கோர்ட்டில் உண்மையைப் பேச மாட்டார்கள் என்று பிராசிக்கியூஷன் தரப்பார் அபிப்பிராயப்பட்டபடியால் அவர்களை இவ்விடம் கூப்பிட்டு விசாரணை செய்யவில்லை என்று சொன்னார். இந்த லாப்பயிண்ட் சம்பந்தமாக நீடித்த நாழிகை வரையில் இரு தரப்பாருக்கும் வாதமுண்டானது. கடைசியில் கோர்ட்டார் ஷை சாக்ஷிகளை விசாரணை செய்ய பிராசிக்கியூஷன் தரப்பார் கட்டுப்பட்டவர்களல்லவென்றும், வேண்டுமானால் அவர்கள் கோர்ட் சாக்ஷியாகவாவது அல்லது டிபன்ஸ் தரப்பு சாக்ஷியாகவாவது கோறப்படலாகுமென்று தீர்மானித்தார்கள்.

(இத்துடன் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷி விசாரணை முடிவு பெற்றது.)

17—11—1913.

கோர்ட்டு இன்று காலை 11 மணிக்குக் கூடினவுடன் ஒபயாலோ என்பவர் பிராசிகியூஷன் தரப்பு பாரிஸ்டரால் விசாரணை செய்யப்பட்டார்

ஒபயாலோ:—நான்செய்லார்மூகமத்கம்பேனியின் பாகஸ்தன். இந்தக்கம்பேனியில் இன்ன இன்னவர்கள் பாகஸ்தர்கள் என்று கணக்கு புஸ்தகங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. பாகஸ்தர்களுக்குள் பாகப்பத்திரம் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. கணக்கு தீர்க்கப் பட்டபோது என்னுடைய பங்கு அதில் எழுதப்பட்டு என் கையெழுத்து வாங்கப் பட்டது. ஆதலால் நான் பாகஸ்தன் என்று அறிந்து கொண்டேன். (கோர்ட்டார் கேள்விக்கு) ஒரு பாகஸ்தன் விலகினாலும் சரி அல்லது புதிதாகச் சேர்ந்தாலும் சரி எல்லா பத்து வரவு காரர்களுக்கும் நோட்டீஸ் கொடுத்து அறிவிப்பது கம்பேனிகளுக்குள் வழக்கம். என்னுடைய கம்பேனியில் நான் சேர்ந்தவுடன் ஒரு புதிய பாகஸ்தர் சேர்க்கப் பட்டார். அப்தல் சக்கூர் என்பவர் பாகஸ்தராகச் சேர்க்கப்பட்ட போது பத்து வரவு காரர்களுக்கு நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. ....கீழ்க் கோர்ட்டில் நான் கிராஸ் செய்யப்பட்டபோது நான் தேக சவுக்கியமாயிருந்தேன். இந்த மோசடியைப் பற்றி நான் துபாஷிடம் புகார் செய்ய வில்லை. எனக்குத் தெரிந்த வரையில் உபகாரத்திற்காக புரோநோட் (accomodation note) எழுதிக் கொடுக்கப்பட வில்லை. நேஷனல் பாங்கியிலிருந்து பதில் வந்த பிறகுதான் என்னுடைய கம்பேனி மோசம் செய்யப்பட்டிருக்கி

றதென்று அறிந்து கொண்டேன். அப்தல் சக்கூருக்கு இதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அப்தல் சக்கூர் மூன்றாவது பாகஸ்தன். மோசடி நடத்தப்பட்ட சமையத்தில் அவர் வாணியம்பாடியிலிருந்தார். (மிஸ்டர் சடகோபாச் சாரியார் குறுக்கு கேள்விகளுக்கு) சாதாரணமாக இரண்டொரு பாகஸ்தர்கள் வியாபாரத்தை மானேஜ் மெண்டு செய்து வருவார்கள். வியாபாரம் சுறுசுறுப்பாய் நடக்கும் போது எல்லா பாகஸ்தர்களும் மதிராசி லிருப்பார்கள். நேஷனல் பாங் பில்கலேக்டர்களை எனக்குத் தெரியும். எங்களுடைய கம்பேனிக்கு பெரும்பாலும் இரண்டாவது குற்றவாளி வருவதுண்டு; பணங்களை வசூல் செய்ய லெட்டரை பட்வாடா செய்ததற்கு அடையாளமாக இரண்டாவது குற்றவாளி தானே டெலிவரி புத்தகத்தில் கையெழுத்து செய்வார்.

விஜயாரகவலு:—(மிஸ்டர் ரிச்மெண்டு குறுக்கு கேள்விகளுக்கு) எனக்குக் காண்பிக்கப்பட்ட 17-நோட்டுகளையும் நான் பார்த்தேன். அவைகளில் 14-என்னால் தாக்கம் செய்யப்பட்டவை. ஜூலை மீ 1௳ முதல் மார்ச்சுமாதம் 14௳ வரையில் 857 புரோநோட்டுகள் டிஸ்கவுண்டு செய்யப்பட்டிருக்கின்றன. முதல் குற்றவாளி தெலுங்கு செட்டி; தமிழிலாவது இந்துஸ்தானியாவது தெரியாது. (கேஸ் இன்னும் முடியவில்லை.)

SOUTH INDIAN INDUSTRIALS.
சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்,

அசல்தரப்பு

ஜட்ஜி.—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்

வாதிகள்.—ஆஜி இஸ்மேல் சேட் வகையரா.

பிரதிவாதிகள்.—ஹாஜி பக்கீர் மூகமத் சேட் வகையரா.

கேசின் விபரம்.—சவுத் இந்தியன் இன்டஸ்டிரியல்ஸ் கம்பேனியில் பிரதிவாதிகளுக்கிருந்த பங்குகளை பிரதிவாதிகள் விற்றுப்போடுவதாகவும் வாதிகள் வாங்கிக்கொள்ளுவதாகவும் வாதி பிரதிவாதிகள் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பிறகு பிரதிவாதிகள் ஒப்பந்தப்படி நிறைவேற்ற அதாவது பங்குகளை விற்பனை செய்ய .... மறுதளிக்கிறார்கள் என்றும் அவர்கள் அவைகளை விற்பனை செய்யக்கட்டாயப்படுத்தும்படியாக வாதிகள் ஐக்கோர்ட்டு அசல் தரப்பில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள்.

லாயர்கள்.—வாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் நார்ட்டனும், பிரதிவாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஷாமியரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு.—இரண்டு தரப்பு சாக்ஷிகளின் வாக்கு மூலத்தை ஆராய்ந்து பார்த்தார்கள். மிஸ்டர் பிளேக், மிஸ்டர் சிம்சன் கக்ஷிக்காரர்களிடம் பற்றற்றவர்கள், ஆதலால் அவர்களுடைய வாக்குமூலத்தின்பேரில் நம்பிக்கை வைக்கப்பட்டது. கக்ஷிக்காரர்களுடைய தகராரைத் தீர்க்க வெண்டுமொனால் பங்குகள் கிரையம் செய்யப்பட்டு கம்பேனியின் கடன்களைத் தீர்க்கவேண்டு மென்று மிஸ்டர் பிளேக் சொன்னார். பிரதிவாதி தன்னுடைய பங்குகளை விற்றுப்போடுவதாகப் பரிஷ்காரமாகச் சொல்லவில்லை. வாதியும் வாங்குவதாக ஒப்புக்கொள்ளவில்லை. பிரதிவாதிகள் தங்களுடைய பங்குகளை விற்பதென்றால் இன்ன இன்ன நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் விற்பனை செய்யப்படுமென்று .... அறிவிக்கவே வாதிகள் ஆக்ஷேபித்தார்கள். ஆகவே பிரதிவாதிகள் ஒப்பந்தப் பேச்சை விட்டு விட்டு பங்குகளை விற்பனை செய்யும் யோஜனையிலிருந்து பின் வாங்கி விட்டார்கள். முதலாவது, பிரதிவாதிகள் தங்களுடைய பங்குகளை விற்பதாக முன் வரவில்லை. கம்பெனியின் கடன்களைத் தீர்ப்பதற்காக பிரதிவாதி தம்முடைய பங்குகளை வாதிக்கு விற்றுப் போடுவதாக சாதாரணமாகச்

சொன்னதைத் தவிர மற்றப்படி வேறில்லை. அப்படி பங்குகளை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிரதிவாதிகள் விற்பனை செய்வதாக முன் வந்தார்கள் என்று சொன்னபோதிலும் அப்படி முன்வந்தவர்கள்பின் வாங்குவதற்கு முந்தி வாதிகள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் கக்ஷிக்காரர்களுக்குள் யாதொரு காரான ஒப்பந்தம் ஏற்படவில்லை.

ஆகவே வாதிகள் செய்துகொண்டிருக்கும் இந்த வியாஜ்ஜியத்தை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து விடுகிறோம். (இந்த தாவாவில் சம்பந்தப்பட்ட தொகை மிகப் பெரிதாயிருப்பதாலும், கேசும் கஷ்டமானதாயிருப்பதாலும் உயர்தரச் செலவு தொகைக்கும் இரண்டு பாரிஸ்டர்களுக்கு பிஸ்களுக்கும் சாட்டிபிக்கேட்டு கொடுக்கும்படியும் கோர்ட்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.) (7—11—1913)

THE INDIA BURMA TRADING COMPANY.

இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனி.

எழும்பூர் சீவ் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

11—11—13.

மாஜிஸ்:—F. D. பேர்ட்

குற்றவாளி: டி. சின்னத்தம்பி முதலி.

இந்தக்கேஸ் இன்று விசாரணை எடுக்கப்பட்டது. பிராசிக்கியூஷன் தரப்பிற்காக மதிராஸ் பாங்க் கிளர்க் மிஸ்டர் டிசில்லா என்பவர் விசாரணை செய்யப்பட்டார். தாம் ஒரு பங்கு எடுத்துக் கொண்டதாகவும் ஷ கம்பேனியில் டைரக்டராகச் சோந்ததாகவும் மறுபடியும் அந்த கம்பேனியை விட்டு விட்டதாக ஜூலை மீ 12உ யுள்ள மதிராஸ் மெயிலில் பயிரங்கப் படுத்தியிருப்பதாகவும் சொன்னார். இதன் பிறகு இந்தியன் பாங்க் லெட்ஜர் கீப்பர் மிஸ்டர் சக்ரவர்த்தி அய்யங்கார், சின்னத்தம்பி முதலியாருக்கும் பாங்கிக்கும் போக்கு வரத்தான கடிதங்களைப் பற்றி விசாரணை செய்யப்பட்டார். இதன்பிறகு சார்ட்டர்ட் பாங்க் காஷியார் மிஸ்டர் சுந்திர முதலியார் விசாரணை செய்யப்பட்டார். ஷிந்து, மதிராஸ் டைம்ஸ் பத்திரிகைகளில் இந்தக் கம்பேனியைப் பற்றி விளம்பரங்கள் சின்னத்தம்பி முதலி பிரசுரித்ததற்கு வவுச்சர் காப்பிகள் ஆஜர் படுத்தப் பட்டன. கேஸ் நாளது மீ 19உ க்கு ஒத்திவைக்கப்பட்டது.

THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னை மாகாண சட்ட சபை.

சட்டசபை மீட்டிங் நிகழ்மீ 11உ செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கோட்டையிலிருக்கும் கவுன்சில் சேம்பரில் கூடினது. கவர்ன்மெண்டு தரப்பு மெம்பர்களுடன் ஜனப்பிரதிநிதி மெம்பர்களாகிய அடியிற் கண்ட ஆனரபில் மெம்பர்கள் வந்திருந்தார்கள்.—மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் மிஸ்டர் U. குன்கிராமன் நாயர், டாக்டர் T. M. நாயர், கான்பகதூர் ஹாஜி இஸ்மேல் சேயிட் பகதூர், மிஸ்டர் E. F. பார்பர், ராவ் பகதூர் A. சுப்பராயலு ரெட்டியார், ஷேயிக் அல்முல்க், T. ஜைலாபுடீன் சாகேப் பகதூர், மிஸ்டர் K. சிதம்பரநாத முதலியார் மிஸ்டர், மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் பந்துலு, மிஸடர் B. V. நரசிம்மய்யர், ராவ் பகதூர் B. நரசிம்மேஸ்வர சர்மா, மிஸ்டர் C. V. S நரசிம்ம ராஜு, மிஸ்டர் K. P. ராமன்மேனன், மிஸ்டர் V. S. சீனிவாச சாஸ்திரி மிஸ்டர் P. கேசவப் பிள்ளை, ராவ் பகதூர் ராவ் பந்தலு. ஜனப்பிரதிகளாகிய ஆனரபில் மெம்பர்கள் 193 கேள்விகள் கேட்டார்

கள். அவற்றுள் வர்த்தகத்திற்குச் சம்பந்தமான கேள்விகளையும் ஜவாப்புகளையும் இவ்விடத்தில் எடுத்து வரைந்திருக்கின்றோம்.

ஆனரபில் ராவ் பகதூர்
V. K. ராமானுஜாச்சாரியார்

கேள்வி நே. 3 (a) சென்னையில் கூடிய ஐக்கிய முயற்சி மாகாணக் கான்பிரன்சில், டிரஸ்ட் (Trust) நிதிகள் ஐக்கிய முயற்சி சென்டிரல் பாங்கிகளில் போட்டு முடக்கப்படும்படியாக இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் சீர்திருத்தப்பட வேண்டுமென்று பிரரேபித்து ஒரு தீர்மானம் பாஸ் செய்விக்கப்பட்டதே அதை கவர்ன்மெண்டார் கவனித்திருக்கிறார்களா?

(b) இது விஷயமாக ஏதேனும் நடவடிக்கை ஆரம்பித்திருக்கிறார்களா?

(c) இதே மாதிரியாக கோர்ட் ஆப்வார்ட்ஸ் ஆக்ட்டை சீர் திருத்துவார்களா?

ஜவாப்பு நே. 3.—தீர்மானம் கவர்ன்மெண்டிற்கு அனுப்பப்படவில்லை. ஆதலால் யாதொரு நடவடிக்கையும் நடத்தப்படவில்லை. இது விஷயமாக ரெவினியு போர்ட்டாரும் கோர்ட் ஆப் வார்ட்சாரும் ஆலோசனை செய்யப்படுவார்கள்.

கே. 16. (a) தஞ்சாவூர் ஜில்லா கோரையார் சமுத்திரத்தில் விழும் விடத்தில் மண் அடர்ந்திருக்கிறதென்றும், அதனால் முத்துப் பேட்டைக்கும் சமுத்திரத்திற்கும் படகுகள் போக்குவரத்து செய்யக் கஷ்டமாயிருக்கிறதென்று ஏதேனும் புகார்கள் கவர்ன்மெண்டாருக்கு எட்டியிருக்கின்றனவோ?

(b) ஸ்தல அதிகாரிகளிடமிருந்து இது விஷயமாக ரிப்போர்ட் தருவிப்பார்களா?

(c) புகார் தகுந்த காரணத்தின் பேரில் செய்யப்பட்டிருந்தால் மண்ணை எடுத்து, நதி, படகுகள் போக்குவரதது செய்ய யோக்கியதையாக விருக்கும்படி செய்வார்களா?

ஜவாப்பு. நெ. 16 (a) 1910-முதல் யாதொரு புகாரும் வரவில்லை.

(b & c) கோரையாற்றில் படகுகள் போக்குவரத்திற்கு வசதிகள் செய்யப்பட வேண்டுமென்கிற விஷயம் 1910, 1911-ல் ஆலோசனை செய்யப்பட்டன. முத்துப்பேட்டையின் வியாபாரத்தை முன்னிட்டுதான் அந்த வசதிகள் செய்யப்பட வேண்டும்; அந்த வியாபாரத்தை முன்னிட்டு இவ்வளவு பெரிய செலவு செய்வது தகாதென்று அப்போதே தீர்மானம் செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தைப் புனராலோசனை செய்வதற்குக் காரணத்தைக் காணோம்.

கே. 17 (a) தஞ்சாவூர் ஜில்லா கன்னியா குமரி முனையிலிருந்து யாழ்ப்பாணம் போகிற பிரயாணிகளுக்கு ஏதேனும் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறதோ.

(b) திருத்திராப் பூண்டி வேதாரணியம் இருப்புப்பாதையின் வேலை சமீப காலத்தில் ஆரம்பிக்கப்படப் போகிறபடியாலும் பிரயாணிகளின் போக்குவரத்தை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாக விருக்கிறபடியாலும் அந்த நிபந்தனையை நீக்கிப்போட ஏற்பாடு செய்வார்களா?

ஜ. 17. (a நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது.

(b) இந்தியாவிலிருந்து தொத்துவியாதி வரவொட்டாதபடி சிலோன் கவர்ன்மெண்டார் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி மறுபடியும் பேசுவது பிரயோஜனப்படமாட்டாதென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

கே. 20. (a) அரிசி ஆலைகளில் அரிசி எவ்வளவு சுத்தப்படுத்தப் படுகிறதென்று கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டிருக்கிறார்களா?

(b) சாப்பிடும் பொதுஜனங்களுடைய நன்மையை நாடி கவர்ன்மெண்டார் பிரவேசித்து திட்டியந்திரங்கள் பிரயோகப்படுத்தப் படுவதை கவர்ன்மெண்டார் தடுப்பார்களா?

ஜ. 20. (a) கவர்ன் மெண்டாருக்குத் தெரியாது.

(b) தீட்டும் யந்திரங்கள் பிரயோகப்படுத்தப் படுவதை தடைசெய்ய கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமில்லை.

ஆனரபில் மிஸ்டர் B. V. நரசிம்மய்யர்.

கே. 37. சேலத்தில் கவர்ன்மெண்டார் விறகு சப்ளை செய்து வந்ததை கவர்ன்மெண்டு சம்பந்த பல்லாத கண்டிராக்டர்களுக்கு யாதொரு நிபந்தனையும் ஏற்படுத்தாதபடி விட்டுவிட்டபடியால் 1911-ல் ரூபா 6-4-0 விதம் விற்பனை செய்துவந்த விறகை ரூ. 10 க்கு ஏற்றி விற்பனை செய்து வருகிறார்கள். இது விஷயமாக சேலம் பொது ஜனங்கள் மீட்டிங்கூடி ஒரு தீர்மானம் செய்தார்கள். மேற்படி தீர்மானமும் இதேவிஷயமாக 15-3-1913-ல் மிஸ்டர் திருவேங்கடாச்சாரியார் முதலானவர்களுடைய மகஜரும்கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டன. இவைகள் (a) வந்து சேர்ந்தனவா (b) அப்படி வந்திருந்தால் கவர்ன் மெண்டார் அது விஷயமாக என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

ஜ. 37. (A) தீர்மானங்களும் மகஜரும் வந்து சேர்ந்தன.

(B) தீர்மானங்களிலும் மகஜரிலும் சொல்லப்பட்டிருந்த பிரேபனைகளின் படி யாதொரு நடவடிக்கையும் நடத்துகிறதில்லை என்று கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஏன் என்றால் காட்டு இலாக்கா கமிட்டியார் செய்திருக்கும் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு இப்படி தீர்மானம் கவர்ன் மெண்டார் செய்திருக்கிறார்கள்.

கே. 39- 1913 ஜூன்மீ கூடின கோயமுத்தூர்ஸர்க்கில் ஐக்கியமுயற்சி கான்பரன்சில் ஐக்கிய முயற்சி செண்டிரல் அர்பன் பாங்கிகள் 1882ம் வருடத்திய இரண்டாவது (இந்தியா) ஆக்ட் 20வது பிரிவு (F) கிளாசின்படி டிரஸட் (Trust) நிதியின் ஜாப்திதாவில் சேர்க்கப்பட வேண்டு மென்றும், இது விஷயமாக ஐக்கிய முயற்சி சங்கங்களின் ரிஜிஸ்டிரார் ஐக்கோர்ட்டிலும் கவர்ன் மெண்டிலும் நடவடிக்கை நடத்தி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானஞ் செய்யப்பட்டது (A) இந்தத் தீர்மானத்தை மேற்படி கான்பரன்ஸ்காரியதரிசி ரிஜிஸ்டிராருக்கு அனுப்பியிருக்கிறாரா? (6) ரிஜிஸடிரார் அது விஷயமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறாரோ (C) கவர்ன் மெண்டார் ரிஜிஸடிராருடனும் அட்வோக்கேட் ஜெனரலுடனும்கலந்து யோஜனை செய்து அப்பேர்ப்பட்ட ஒரு விதி (Rule) பிறக்கும் படியாக ஐக்கோர்ட்டில் நடவடிக்கை நடத்த இஷ்டப் படுவார்களா?

ஜ. (A & B) காரியதரிசி ரிஜிஸ்டிராருக்கு எழுதியது கவர்ன் மெண்டாருக்குத் தெரியாது (C) பிரேரபணை கவர்ண் மெண்டாரால் ஆலோஜனை செய்யப்படும்.

ஆனரபில்மிஸடர். V. S. சாஸ்திரி.

,கே. 98. (A) ஐக்கிய முயற்சி இலாக்கா இன்ஸ்பெக்டர்களுக்கு மாதம்ஒன்றுக்கு ரூ 60 முதல் ரூ 150 வரையில் சம்பளம் வாங்கும் படியான முதல் கிளாஸ் இன்ஸ் பக்டர்களுக்குக்கூட சேவகன் கொடுக்கப் படுகிறதில்லை என்பது வாஸ்தவம் தானா?

(6) ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் ஒவ்வொரு சேவகன் கொடுக்கும் படி கவர்ன் மெண்டார் இஷ்டப் படுவார்களா ?

ஜ-(a) ஆம்.

(b) அவசியமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படவில்லை.

கே. 99. கோவாப்பரேட்டிவ் வேலைக்காக சென்னை ராஜதானி பலடிவிஷன் களாகப் பிரிவினை செய்யப் பட்டிருக்கிற தல்லவா? அந்த ஒவ்வொரு டிவிஷனிலும் கடந்த ஜூனமீ 30உ வரையில் ரிஜிஸ்டிரேஷனுக்காக எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன அந்தத் தேயுடன் முடியும் ஒரு வருஷத்தில் எத்தனை சங்கங்கள் ரிஜிஸடர் செய்யப் பட்டிருக்கின்றன?

	மனுக்கள்	ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்கள்.
ரிஜிஸ்டிரார் டிவிஷன்	115	23
திருச்சி அசிஸ்டன்	244	52
பெஸ்வாடா	327	11
வெல்லூர்	145	20
	881	106

N. B. பெஸ்வாடா டிவிஷனில் 37[illegible] சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப் படாமலிருப்பதற்கு காரணம் என்ன வென்று ஆரைபில் மெம்பர் விசாரிக்க, ரிஜிஸ்டராரும் அவருடைய சிப்பந்திகளும் தற்கால மிருக்கும சங்கங்கள் ஒழுங்காய் நடை பெற்று வருவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்றும் மேலும் அனேக மனுக்கள் ரிஜிஸடர் செய்யும்படியான யோக்கிதையற்றன வாயிருக்கின்றன வென்று ஆரைபில் சர் ஜான் அடக்கின்சன் பதில் சொன்னர்.

—:o:—

ஆனரபில் மிஸடர் சிச்மேண்ட்

கே. 102. ரயில் வேலைக் காரர்களின் கட்டுப் பாட்டைத் தடைப் படுத்த ஏதேனும் ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்களோ சமீபத்தில் நடந்த கட்டுப் பட்டைப் பற்றி ஏதேனும் கவர்ன்மெண்டார் விசாரணை செய்திருக்கிறார்களோ?

ஜ. இல்லை.

ஆனரபில் மிஸடர் K. ராமய்யங்கார்.

கே. 135. சென்னை ராஜதானியில் மீன் பிடிக்கும் தொழிலைக் குறித்தும் ஜப்பானில் விவசாயத்தைப்பற்றியும் சர் பிரடரிக் நிக்கல்சன் எழுதியிருக்கும் முறையே வியாசத்தையும் புஸதகத்தையும் சுதேச பாஷைகளில் அச்சிட்டு ரயத்துகளுக்கு விசாலமாக பட்டுவாடா செய்யக் கவர்ன்மெண்டார் இணங்குவார்களா?

ஜ. சுதேசபாஷை தர்ஜமா பொருந்துமென்பதை கவர்ன்மெண்டார் சந்தேகிக்கிறார்கள். ஆயினும் யாரேனும் தர்ஜமா செய்து அந்த தர்ஜமா திருப்தி கரமாயிருந்தால் சில புஸ்தகங்களை வாங்கி ஆதரிப்பதாக கவர்ன்மெண்டார் ஏற்கனவே அவர்களுடைய சம்மதத்தை அறிவித்திருக்கிறார்கள்.

ஆனரபில் மிஸடர் P. C. சோமசுந்திர செட்டியார்

கே: 142 (a) தென்னிந்தியா விலிருக்கும் சர்க்கரைத் தொழிற் சாலைகளை சோதனை செய்து ஏன் உள் நாட்டில் தயார்செய்யப் படும் சர்க்கரை அன்னிய தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப் படும் சர்க்கரையுடன் போட்டி போட முடியவில்லை என்று கண்டுபிடிக்க இணங்குவார்களா? (6) சர்க்கரை ஆலையுடன் பாகு சர்ப்பத்து முதலிய வைகளைப் போட்டுக் காய்ச்சி பட்டைச் சாராயம் இறக்கும்படியான டிஸ்டிலரிகள் ஏற்பாடு செய்யக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

(a) கவர்ன்மெண்டார் விசாரிப்பார்கள்.

(b) அவரவர்கள் தனித்தனியே மனு செய்து கொண்டால் மனுவிற்குத் தக்கபடி கவனிக்கப் படும்.

கே. 143. (a) இந்த மாகாணத்தில் கைத் தொழில் களுடைய காரியங்களுக்காக ஜலவல்லமையைக் கொண்டு மின்சார சக்தி உண்டு பண்ணும் விஷயத்தில் கவர்ன் மெண்டார் கவனத்தைச் செலுத்திவர இஷ்டப்படு வார்களா?

(b) கோயமுத்தூர் கஸ்பாவிற்கு ஜலமும் மின் சாரமும் சப்ளை செய்யும் படியான ஒரு ஏற்பாடு கவர்ன் மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகிறதா?

(C) அப்படி யிருக்குமானால், சாங்கிஷன் செய்து வேலையை சீக்கிரம் ஆரம்பிக்கும் படியாக கவர்ன் மெண்டார் இஷ்டப்படு வார்களா?

ஜ—(a) கவர்ன் மெண்டார் கவனம் செலுத்த ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்கள்

(q & c) சிறுவாணி நதியிலிருந்து ஜலம் சப்ளை செய்யவும் அத்துடன் மின்சார சக்தி உண்டாக்கவும் சுகாதார இன்ஜினீர் ஒரு பிரரேபணை செய்திருக்கிறார். சீப் இன்ஜினீர் அந்தப் பிரரேபணையை ஆராய்ந்து வருகின்றார். அது சம்பந்தமாக எல்லா விஷயங்களும் பூராய்ப் பரிசோதனை செய்யப்படும் பரியந்தம் கவர்ன்மெண்டார் அந்த ஏற்பாட்டைக் குறித்து யாதொன்றும் நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள்.

ஆனரபில் ராவ்பகதூர் A. சுப்பராயலு ரெட்டியார்.

கே. 148. பன்ருட்டி—திருச்சி ரயில்வே ஏற்பாடு என்ன நிலைமையி லிருக்கிறதென்றும் எப்போது வேலை ஆரம்பிக்கப்படுமென்றும் கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப்படுவார்களா?

ஜ: ரயில்வே போர்ட்டார் ஆலோசனையிலிருந்து வருகிறது.

ஆனரபில் மிஸ்டர் K சிதம்பரநாத முதலியார்.

கே. 174. 1880, 1890, 1900, 1910 ஆகிய இந்த வருடங்களில் மைனர் துறைமுகங்கள் என்று செல்லும்படியான சிறிய துறைமுகங்கள் எத்தனை யிருந்தன. ஒவ்வொரு வருடத்திலும் சராசரி வியாபாரம் எவ்வளவு ஒவ்வொன்றிலும் நடந்து வந்தது அவைகளின் எண்ணிக்கையிலும் வியாபாரத்திலும் குறைவு உண்டானதோ?

அப்படி யிருந்தால் அவைகளில் முக்கிமானவையை யாவது விருத்திபடுத்த ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் இணங்குவார்களா?

ஜ:—வருடம்	துறைமுகங்களின் எண்ணிக்கை	வியாபார மொத்தம் ரூபாய்
1879—80	71	11,01,02,465
1889—90	145	15,10,01,547
1899—1900	147	17,53,08,357
1909—10	102	27,54,12,320

1900 முதல் துறைமுகங்கள் குறைந்து போயிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் பெரும்பாலும் வியாபாரம் பூஜ்ஜியமாயிருந்த துறைமுகங்கள் எல்லாம் மூடப்பட்டுப்போய்விட்டன. சில துறை முகங்களைப் பலப்படுத்த இப்போது கவர்ன்மெண்டார் யோஜனை செய்து கொண்டு வருகிறார்கள்.

ஆனரபில் மிஸ்டர் C. V. S. நரசிம்ம ராஜு.

கே. 192. (a) மகாராஷ்டிர பாஷையில் 4-வதுஸ்டான்டர்ட் பாஸ்செய்தசிறிய பிள்ளைகளுக்குப் புனவில் 1910-ல் ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமோ? எப்படி

இந்தப் பள்ளிக்கூடம் நடத்தப்பட்டுவருகிற தென்று கவர்ன்மெண்டார் விசாரிக்க இணக்குவார்களா?

(b) விவசாயத்தின் நூதன அபிப்பிராயங்களை பயிரங்கப்படுத்த இம் மாகாணத்தின் விவசாய இலாக்காக்காரர்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

ஜ:—அப்பேர்ப்பட்ட ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறதென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரியும். அந்தப் பள்ளிக்கூடம் எப்படி வேலை செய்யப்படுகிறதோ அது பம்பாய் விவசாய இலாக்கா ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்ட நூதன விஷயங்களைப்பற்றி அடிக்கடி துண்டு விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. 9 விவசாயப் பண்ணைகளிருக்கின்றன. ஒரு கலாசாலையு மிருக்கிறது. மேற்படி சோதனைப் பண்ணைகளில் சம்பந்தப்படாத இலாக்கா மெம்பர்கள் உள்நாட்டு விவசாயத்தை விருத்தி செய்து வரும்படியான பலவிதமான வேலைகளைச் செய்துவருகிறார்கள்.

(இத்துடன் கேள்வி ஜவாப்பு முடிவுபெற்றது)

CO-OPERATION.
ஐக்கிய முயற்சி.
CO-OPERATIVE MOVEMENT IN GERMANY.
ஜெர்மனியில் ஐக்கிய முயற்சி,

:o:

நம்முடைய ராஜதானியில் ஐக்கிய முயற்சி ஏற்பட்டு 9-வது வயதை அடைந்திருந்தும் சொற்ப வட்டிக்குப் பணங் கொடுக்கும் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றனவே ஒழிய ஐக்கிய முயற்சியை இதர விஷயங்களில் இன்னும் பிரயோகப் படுத்தவில்லை. பாருங்கள்! ஜெர்மெனியில் எத்தனை விதமான சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கனவேயிருந்த சங்கங்களுடன் 1912—ல் மின்சார சக்தி சப்ளை செய்வதற்காக 342 சங்கங்களும், ஆடுமாடு விற்பனைக்காக சங்கங்கள் 12, ஜலயந்திர விற்பனை சங்கங்கள் 27, வேறுவகை யாந்திரங்களை கூலிக்குக் கொடுக்கும் சங்கங்கள் 47, குதிரை சீர்திருத்தத்திற்கான சங்கங்கள் 14,..........
...............................மாடுகள் மேய்ப்பதற்கான சங்கங்கள் 18 நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 5 JAN 1914 MADRAS.

CO-OPERATIVE CONFERENCE.
ஐக்கியமுயற்சி கான்பரன்ஸ்.

இந்தியாவில் எல்லா மாகாணங்களிலுமுள்ள ரிஜிஸ்டிரார்கள் வருஷத்திற்கு ஒருமுறை விம்லாவில் கூடுவது வழக்கம். அதே மாதிரியாக இவ்வருடத்தில் கூடினார்கள். நம்முடைய சென்னை மாகாண கோவாபரேடிவ் ரிஜிஸ்டிராராகிய திவான்பகதூர் ல. டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையும்போயிருந்தார். சர். ராபர்ட் கார்லைல் சபா நாயகரா யிருந்தனர். பிரசங்க முடிவில் அடியிற் கண்டபடி பேசினார்:— "இந்தப் பெரிய முயற்சியில் கவர்ன்மெண்டாருடைய சம்பந்தம் எம்மட்டில் என்று நீங்கள் கேட்கக் கூடும். என்னுடைய ஜவாப்பு என்னவென்றால் ஜனங்கள் இம்முயற்யில் நம்பிக்கை வைக்கும்படியாக என்ன என்ன அவசியமாகச் செய்யப்பட வேண்டுமோ அவைகள் எல்லாம் செய்வதும் சங்கங்கள் ஒழுங்காக நடைபெற்று வரும்படியாகச் செய்வதும் கவர்ன்மெண்டாருடைய கடைமை. ஐக்கிய முயற்சியின் சத்து என்னவென்றால் தனக்குத் தானே உதவிசெய்து கொள்ளுதல், ஜனங்கள் தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொள்ளக் கூடிய நிலைமையிலிருக்கும் போது கவர்ன்மெண்டாரை எதிர் பார்க்க முடியாது. ஐக்கிய முயற்சியில் கவர்ன் மெண்டார் அலக்ஷியமாகவும்

பராமுகமா யிருப்பதை காட்டிலும் மிதமிஞ்சின பக்ஷம்காட்டுவது கெடுதலை விளைவிக்கும். உதவி செய்ய வேண்டியது அவசியமாக விருக்குப் போது எந்த கவர்ன்மெண்டும் உதவி செய்ய பின்வாங்க மாட்டா தென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்."

Deputation to H. E. the Viceroy.

ராஜப்பிரதிநிதிக்கு ஒரு டெபுடேஷன்.

நாளது நவம்பர் மீ 25உ மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ் அவர்கள் சென்னைக்கு வரும்போது ஐக்கிய முயற்சிக் காரர்களின் தரப்பில் அடியிற்கண்ட கனவான்களடங்கிய ஒரு டெபுட்டேஷன் போய் பேட்டி பெற்றுக்கொண்டு குறைகளை அறிவித்துக் கொளும். டெபுடேஷனை ஏற்றுக் கொள்வதாக ஹிஸ் எக்சலன்சி வைசிராய் அவர்களும் சம்மதித்திருக்கிறார்கள்.

நெ.	பெயர்.	ஜில்லா அல்லது சங்கம்.
1.	திவான் பகதூர் K. கிருஷ்ணசாமி ராவ்காரு சி.ஐ.இ.	மதிராஸ்செண்டிரல் அர்பன் பாங்கி.
2.	K. B. ராமநாதய்யர் அவர்கள் எம்.ஏ.பி.யல். எல்.டி.	திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேட்டிவ் ஸொஸைடி.
3.	K. ராமசாமி அய்யர் அவர்கள் பி. ஏ. பி. யல்.	மதுரை.
4.	C.N. கிருஷ்ண ஸ்வாமி அய்யர் அவர்கள் யம்.ஏ.எல்.டி.	கோயமுத்தூர்.
5.	ராவ்பகதூர் Y. நாராயணராவ் அவர்கள்	திருச்சினாப்பள்ளி
6.	வெங்கிட்டப்பய்யா	தெனாலி.
7.	ஆனரபில் ராவ்பகதூர் V. K. ஸ்ரீமானுஜாச்சாரியார் அவர்கள் பி. ஏ.	கும்பகோணம்.
8.	M. ஷிவராவ் அவாகள்	புத்தூர்.
9.	T. ஆதிநாராயண செட்டிகாரு	சேலம்.
10	M.V ஹயக்ரீவ ராவ்காரு	பர்ஹாம்பூர்
11.	ராவ்சாகிப் அருளய்ய நாயுடு காரு	செங்கற்பட்டு.
12.	திவான்பகதூர் M. ஆதிநாராயணய்ய காரு.	

AGRICULTURAL DEPARTMENT CIRCULAR.

விவசாய இலாகா சர்க்கியூலர்.

தற்காலம் உபயோகத்திலிருக்கும் விவசாயக்கருவிகளை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம்.

சென்னை இராஜதானியில் இருக்கும் குடியானவர்கள் தற்காலம் தாங்கள் உபயோகித்து வரும் விவசாயக் கருவிகளைவிட சிரேஷ்டமானவைகளை உபயோகத்துக்கு கொண்டுவர வேண்டிய காலம் நெருங்கி விட்டது. மற்ற விலைவாசிகள் அதிகரித்ததனால் தனது பூமியில் கிடைக்கும் மகசூலிலிருந்து ஒரு குடியானவனுக்கு லாபம் கிடைத்த போதிலும் சாகுபடி செலவும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சென்ற ஐந்து வருஷங்களுக்குள் நல்ல வண்டி அல்லது உழவு மாடுகளின் விலை அனேக விடங்களில் இரட்டித்து விட்டது. சாதாரணகால்நடைகளின் விலையும் அதிகரித்து வருகிறது. மாட்டுத் தீவனத்தின் விலையும் ஜாஸ்தியாய் வருகிறது. வேலை ஆட்களை அகப்படுவது கஷ்டம். வேலையாட்களின் கூலியும் ஜாஸ்தியாக வருகிறது. இன்னும் அதிகப்படும் என்பதில் யாதொரு சந்தேக மில்லை. ஒரு ஆளும் ஒரு ஜதை எருதுகளும் செய்யும் வேலையின் அளவு முன்போலவே யிருந்தாலும் அந்த வேலைக்கு முன்போலல்லாமல் தற்காலத்தில் செலவாகும்

தொகை அதிகமே. சில விடங்களில் கூலியா ட்கள் தங்களுக்கு சாகுபடி வேலையில் போது மான கூலி கிடைப்பதில்லை யென்று பட்டணங் களுக்குப் போகிறார்கள்; அல்லது ஜாஸ்தி கூலி கிடைக்கக் கூடிய தொழில்களில் பிரவேசிக்கி றார்கள். சிலவிடங்களில் சாகுபடி வேலைக்கு கூலியாட்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இன்னும் சிலவிடங்களில் கூலியாட்கள் கிடை த்தாலும் அதிக கூலி கொடுக்க வேண்டியிருக் கிறது. இவைகளை உத்தேசித்து கூலியாட்க ளைக் குறைத்து சிரேஷ்டமான வேலையைச் செ ய்யக்கூடிய விதத்தைத் தேடவேண்டியது அவ சியம்.

இச்சென்னை இராஜதானியில் இதர விடங் களைக் காட்டிலும் பல்லாரி, கடப்பை முதலிய தெலுங்கு ஜில்லாக்களில் குடிபரப்பு குறைவு, இவ்விடங்களில் குறைந்த கூலியாட்களைக் கொ ண்டு சிரேஷ்டமான சாகுபடி வேலை செய்யப்ப டுகிறது. இந்த ஜில்லாக்களில் கரிசல் நிலத்தில் வேலை செய்ய கடினமான வேலை செய்யக்கூடிய எருதுகளின்விலை அதிகம். தவிரவும் இந்த ஜில் லாக்களில் காலமழையும் குறைவு. ஆனதால் பெய்த மழையைக் கொண்டு விதைப்புகாலத் தில் அதிக நிலம் விதைக்கக்கூடிய விவசாயக் கருவிகள் அவசியமாக விருக்கிறது. ஆகை யால் இந்த ஜில்லாக்களில் எருதுகளைக் கொ ண்டு களை வெட்டக்கூடிய கருவிகள், விதைக் கலப்பைகள், மற்றும் எருதுகளைக் கொண்டு பயிர் உழவு முதலிய வேலைகள் செய்யக்கூடிய கருவிகளாகிய சிரேஷ்டமான இந்திய நாட்டு விவசாயக் கருவிகளைப் பார்க்கிறோம். நாட்டு கலப்பையைக் கொண்டு கைவிதைப்பு நடத்தி வரும் ஜில்லாக்களில் மூன்று ஜதை எருதுக ளும் மூன்று கூலியாட்களும் ஒரு நாளில் செய் யக்கூடிய வேலையை மேற்கூறிய தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு ஜதை எருதுகளைக் கொ ண்டு அதே காலத்தில் ஒரு ஆள் செய்து விடு வான். ஐரோப்பா தேசத்து குடியானவர்கள் குடியேறி காடு வனங்களை யழித்து சாகுபடி செய்யும் அந்நிய தேசங்களில் பூமியை சாகு படி செய்ய கூலியாட்கள் கிடைப்பது அருமை யாயும் கூலியாட்களுக்கு அதிக கூலி கொடுக்க வேண்டி யிருப்பதாலும் விநோதமாய் ஏற்படுத் தப்பட்ட விவசாய கருவிகளைக் கொண்டு அதிக வேலைகள் செய்யப்படுகின்றன. சாகு படி வேலை முழுவதும் நீராவி யந்திரங்களைக் கொண்டு நடத்தப்படுவதாய் கேள்விப்படுகி றோம். உழவு, பயிர் உழவு, விதைப்பு, இழு வல் முதலிய எல்லா வேலைகளும் ஒரே காலத் தில் நடத்தப்படுகிறது. ஒரு மாசூலை அறுவி டை செய்து, அடித்து, தூற்றி மூட்டைக்குள் தானியத்தை ஒரே காலத்தில் போடும்படியான யந்திரங்கள் இருக்கின்றன. புதிதாய் சாகுபடி க்குக் கொண்டுவரப்படும் சிரேஷ்டமான பூமி யிருக்கும் தேசங்களுக்கு மாத்திரமே சொல்ப கூலியாட்களைக் கொண்டு வேலை செய்யக்கூடிய விலையுயர்ந்த கருவிகள் லாயக்கானது. இந்தியா விலிருக்கும் குடியானவர்கள் ஒவ்வொருவருக் கும் உள்ள பூமியின் விஸ்தீரணம் சொற்பம். ஆகையால் ஆயிரக் கணக்கான பூமியை சாகு படி செய்ய லாயக்கான விலையுயர்ந்ததும் வே லைப்பாடு முள்ள விவசாய யந்திரங்கள் இந்திய குடியானவர்களுக்கு வேண்டிய தில்லை. அப் படி அவ்வியந்திரங்களை வைத்து சாகுபடி செ ய்தால் லாபம் கிடைக்காது. ஆனால் இந்திய குடியானவர்களுக்கு லாயக்கான அனேக விவ சாயக் கருவிகள் இருக்கின்றன. இவைகளை உபயோகிப்பதால் அதிகலாபம் கிடைக்கும் ரூபாய் 200 அல்லது 300 பெறுமான ஒரு ஜதை எருதுகளையுடைய ஒரு இந்திய குடியா னவன் கூலியாளாவது காலமாவது குறைக்காத துமான விவசாயக் கருவிகளை வைத்துக் கொ ண்டு திருப்தியடைவதைப் பார்க்க அன்னிய நாட்டு விவசாயத்தில் பழக்கமுள்ள ஒருவனு க்கு மிகவும் ஆச்சரிய மாயிருக்கிறது. ஏனெ

னில் கொஞ்சம் சிலவு அதிகம் செய்தால் குறைந்த கூலியாட்களைக் கொண்டு நல்ல வேலை செய்யக்கூடிய ஒரு உழவு கலப்பை கிடைக்கக் கூடியதா யிருந்தபோதிலும் இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்கு மேல் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும் அதை இந்திய குடியானவன் வாங்க மனம் தளர்ந்து பின்னடைகிறான். குடியானவனுடைய ஏழ்மை நிலமையை உத்தேசித்தும் அவன் செய்யவேண்டிய வேலையை பொருத்தும் இந்திய பூமிக்குத் தகுந்த அனேகவித கலப்பைகளே அல்லாமல் குறைந்த சிலவிலும் குறைந்த கூலியாட்களைக் கொண்டும் அதிக சீக்கிரத்திலும் வேலை செய்யக் கூடிய அனேக விவசாயக் கருவிகள் உண்டு. உதாரணமாக இரண்டாவது மூன்றாவது சால்நாட்டுக் கலப்பையைக் கொண்டு உழுவதற்கு பதிலாக கல்டிவேடர் (Cultivator) என்றசொல்லப்படும் கருவியைக் கொண்டு வேலை செய்தால் அதி சீக்கிரம் மேற் கூறிய வேலை முடியும். தவிர முள்பளுவை உபயோகிப்பதால் கைக்கள் சிலவு மிகக் குறையும். இவைகளைத் தவிர அந்தந்த வேலைக்குரிய அனேக கருவிகள் உண்டு. கறும்பாட இரும்பாலைகளும், கரந்த பாலிலிருந்து ஆடை உடனே எடுக்கக்கூடிய யந்திரங்களும் இவைகள்போன்ற அனேக யந்திரங்கள் இருக்கின்றன. இந்திய குடியானவனுக்கு இது விஷயங்கள் தெரிந்து இக்கருவிகளின் அனுகூலங்களும் ஏற்பட்டு இம்மாதிரி கருவிகள் வேண்டியதெனப் பலரும் வெளிவந்தால் அந்தந்த இடங்களுக்குத் தகுந்தபடி கருவிகளில் வேண்டிய மாறுபாடுகளும் செய்யக்கூடும். தற்காலம் செய்யப்படும்ஒரு வேலையைச் சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு கருவியைக்கொண்டு இப்பொழுது வேண்டியிருக்கும் ஆள் செலவிலும் கால்நடைச் செலவிலும் அரைவாசியில் செய்ய முடியுமேயானால் ஒரு ஜதை எருதுகளைக் குறைப்பதால் மட்டும் ஒவ்வொரு வருஷத்திலும் கீழ்குறித்த லாபம் அடையலாம்.—

ஒரு வருஷத்துக்கு

ஒருஜதை எருதுகளைப்பார்க்க ஒரு ஆள் சம்பளம் மாதம். ரூ.

ஒன்றுக்கு 5 ரூபாய்வீதம்	60
மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3 வீதம் மாட்டுத் தீனி செலவு	36
ரூபாய் 200 பொருமான ஒரு ஜதை எருதுகள், 10வது வேலை செய்தால் எருதுகள் வாங்காததால் பிரதிவது லாபம் ...	20
ரூபாய் 100-க்கு 5 வட்டி வீதம் இந்த ரூபாய் 200-க்கு வட்டிலாபம் ...	10
ஆக ரூ. ...	126

வருஷம் ஒன்றுக்கு ரூ. 126 மீதி செய்யலாம். வருஷா வருஷம் ஒருவனுக்கு ரூ. 126 லாபம் கிடைக்க 100-க்கு ரூ. 9 வீதம் ரூ. 1,400 முதல் வேண்டியது. இத்தொகையில் காலில் ஒருபங்கு, அதாவது ரூ. 350 க்கு ஆள் செலவையும் எருதுகளின் செலவையும் குறைத்து மேற்கண்ட லாபத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல விவசாயக் கருவி ஒன்று வாங்கலாம்.

கோயம்புத்தூர் விவசாயப் பண்ணையில் எல்லாவித விவசாயக் கருவிகளையும் ஒருமிக்க சேர்ப்பதாக உத்தேசம். இப்படிச் சேர்ததபிறகு சென்னை இராஜதானியிலும் உள்ள குடியானவர்கள் தங்கள் பூமிக்கும் வேலைக்கும் தகுந்த கருவியைப் பொறுக்கி எடுத்து உபயோகிக்க சுலபமா யிருக்குமென்று நம்புகிறோம்.

எ. சி. சாம்ஸன்
விவசாய டிப்டி டைரக்டர், தென் இலாகா,
திருச்சினாப்பள்ளி,

INDUSTRIES.
கைத்தொழில்கள்.

THE HON'BLE DOCTOR NAIR AND FACTORIES ACT.
ஆனரபில் டாக்ட்டர் நாயரும் தொழிற் சாலைகள் ஆக்ட்டும்.

—(:-:)—

தொழிற் சாலை ஆக்ட்டில் வேலைக்காரர்களுக்கு சாதகமாகச் சொல்லப் பட்டிருக்கும் சில அம்சங்கள் ஷார்ச்சிதத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்றும் ஆகையால் அது விஷயம் கவர்ன்மெண்டாருடைய கவனத்தைப் பற்றவேண்டு மென்று கடந்த 11ந்தேதி நடந்த சட்ட சபையில் டாக்ட்டர் T. M. நாயர் அவர்கள் பிரரேபணை செய்திருந்தார்கள். கவன்மெண்டு தரப்பு ஆனரபில் மெம்பர்கள் சில சமாதானம் சொன்னதன் பேரில் தீர்மானத்தை வாபஸ் பெறறுக் கொள்ளப்பட்டது.

THE HON'BLE Mr. T. V. SESHAGIRI IYER AND TECHNICAL SCHOOLS.
ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யரும் கைத்தொழிற் பள்ளிக்கூடங்களும்.

மதுரையில் கவர்ன் மெண்டாரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கைத்தொழிற் பள்ளிக் கூடத்தைப் போல, வசதி பொருந்தப் பெற்ற பொருத்தமுள்ள ஸ்தலங்களில் இன்னும் 5 கைத்தொழிற் பள்ளிக் கூடங்கள் கவர்ன் மெண்டாரால் ஸ்தாபிக்கப் படவேண்டு மென்று இந்த சட்டசபை சிபார்சு செய்கிறதென்று ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் கடந்த 11ந்தேதி கூடின சட்ட சபையில் ஒரு பிரரேபணை செய்திருந்தார்கள். இந்தத் தீர்மானத்தைப் பிரரேபித்த போது ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் விஸ்தரித்து பேசினது மன்றி சில ஜனப்பிரதிநிதி மெம்பர்களும் இப்பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கப்பட. வேண்டு மென்பது அவசிய மென்று எடுத்துப் பேசினார்கள். கவர்ன்மெண்டு தரப்பு மெம்பர்களுடைய ஆக்ஷேபணையின் சாரம்சம் என்ன வென்றால், செலவு அதிகப்படுகிறதென்பதே; ஆயினும் இதுவிஷயமாக வோட்டு வாங்கப் பட்டபோது 16 பேர்கள் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கப் படவேண்டு மென்றும் 18 பேர்கள் வேண்டிய தில்லை என்றும் வோட்டுக் கொடுத்தார்கள். மேற்படி 16 பேர்களில் பெரும்பான்மையோர் ஜனப் பிரதிநிதி மெம்பர்கள் என்றும் 18 பேர்களில் பெரும் பான்மையோர் கவர்ன்மெண்டு தரப்பு மெம்பர்கள் என்ற நாம் எடுத்துச் சொல்ல வேண்டிய தனாவசியம்.

THE MADRAS INDUSTRIAL EXHIBITION.
சென்னை கைத்தொழில் காட்சி.

சென்னைப் பீப்பில்ஸ் பார்க் என்னும் சிங்காரத் தோட்டத்தில் அமைக்கப் பட்டிருக்கும் சவுத் இந்தியன் அதல்டிக் அசோஸியேஷன் என்ற சொல்லும்படியான தேகப்பயிற்சி சங்கத்தார்கள் பந்திய ரவுண்டுபூமியில் இவ்வருஷம் டிசம்பர்மாதம் 24௳ ஆரம்பமாக ஒரு கைத்தொழில் பொருட்காட்சிநடத்தப்போகிறார்கள். காட்சி டிசம்பர்மாதம் 24 தேதி திறக்கப்பட்டு 1914-ம் வருஷம் ஜனவரி மாதம் 2 தேதி வரையில் நடைபெறும். இந்தியாவின் பல விடங்களி

விருந்து வேலைப்பாடான சாமான்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விவசாய சாமான்கள் யந்திரங்கள், கைத்தொழில் யந்திர சாமான்கள் பின்னல் வேலைப்பாடமைந்த துணிகள், பட்டுத்துணிகள், கம்பளங்கள், உலோக சாமான்கள், கல்—களிமண்—மரவேலைப்பாடமைந்த சாமான்கள் இன்னும் நானுவிதமான சாமான்களும் காண்பிக்கப்படுமாம். ஸ்திரீகள் செய்யும்படியான வேலைப்பாடான சாமான்களும் காண்பிக்கப்படும். மேற்படி சங்கத்தார் மைசூர் தசரா கைத்தொழிற் காக்ஷியைப்போய்ப் பார்த்து வரும்படியாக அவர்களுடைய கௌரவ காரியதரிசியாகிய மிஸ்டர் V. B. குருசாமிப் பிள்ளை அவர்களை அனுப்பினார்கள் என்றும் ஒரு பிரஸ்தாபம் உலாவுகின்றது. இன்னும் இது விஷயமாகச் சங்கத்தார் பல பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறோம்.

THE MATERIAL PROSPERITY OF MYSORE.

மைசூரின் பொருளாதார சுபிக்ஷம்.

மைசூரில் மேன்மை தங்கிய லார்ட் ஹார்டின்ஜ் அவர்களுக்கும் மென்மைதங்கிய லேடி ஹார்டின்ஜ் அவர்களுக்கும் மைசூர் மகாராஜா அவர்கள் கடந்த 6-ம் தேதி சர்க்கார்விருந்து செய்துவைத்து அவர்களுடைய சௌக்கியத்திற்காக டோஸ்ட் பிரரேபனை செய்தபோது மைசூர் சமஸ்தானம் பொருளாதார நிலைமையில் விருத்தி அடைந்து வந்திருப்பதைப்பற்றி அடியிற் கண்டபடி எடுத்துச் சொன்னார்.—

இந்தியாவின் மற்ற பாகங்களைப்போல வைசிராய்அவர்களுடைய சிலாக்கியமான பரிபாலனத்தில் சமஸ்தானம் அமரிக்கையும் க்ஷேமத்தையும் அடைந்து வந்தக்கொண்டிருக்கும்போது அவர்கள் வந்திருக்கிறார்கள். வருஷங்கள் ஒன்றின் பின் ஒன்றாய் சுபிக்ஷமா யிருந்துவந்ததை முன்னிட்டு சமஸ்தானத்தின் பொருளாதார நிலைமையை விருத்தி படுத்திக்கொண்டு போவதில் கவனத்தைச செலுத்த என்னுடைய கவர்ன்மெண்டிற்கு சக்தி உண்டாயிருக்கிறது. இதனால் நீர்ப்பாய்ச்சல் வசதிகளிலும் இன்னும் மற்ற மராமத்து இலாக்கா வேலைகளிலும், இருப்புப் பாதைகளை விஸ்தீரணப் படுத்துவதிலும் கல்வியையும் கைத்தொழிற்களையும் விருத்திப் படுத்துவதிலும் அதிகப்படியாய் செலவுசெய்து வருகிறது. கவர்ன்மெண்டினுடைய நோக்கங்களிலும் செய்கைகளிலும் பொது ஜனங்கள் கலந்து கொள்ளும்படியான அநேக நியமங்கள் இந்த சமஸ்தானத்தில் அமைந்திருக்கின்றன. Representative assembly என்று சொல்லும் படியான ஜனப் பிரதிநிதிசபை வெகு காலத்திற்கு முந்தியே ஸ்தாபிக்கப்பட்டுப் போய்விட்டது. அது ஜனங்களுடைய குறைகளை கவர்ன்மெண்டாருக்கு அறிவித்தும் கவர்ன்மெண்டாருடைய நோக்கங்களை ஜனங்களுக்கு அறிவித்தும் இவ்விதமான உபயோகமான வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றது.

பொருளாதாரக் கான்பரேன்ஸ்.

இன்னும் ஜனங்கள் சமஸ்தான பரிபாலனத்துடன் நெருங்கி பழகவேண்டுமென்கிற கருத்துடனும் ஜனங்களிடமிருக்கும் சுயமாக நினைத்துச்செய்யும் தன்மையையும் விருத்தி செய்துகொண்டுபோகவேண்டுமென்கிற கருத்துடனும் கைத்தொழில் பொருளாதார கான்பரன்ஸ் ஒன்று இச்சமஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் கைத்தொழில், படிப்பு, விவசாயம் ஆக ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரத்தியேக கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கான்பரன்சின் கடமை என்னவென்றால் யோசிப்பதும் பயிரங்கப்படுத்துவதும். ஆகவே இந்த கான்பரென்சின் மொத்தக்கருத்து என்னவென்றால் ஜனங்கள் நினைக்கவும், செய்யவும் முடிவில் உற்

பத்தி செய்யவும் ஆகிய இவைகளில் தயார்படுத்துவதே. இந்த கான்பரென்சு சமஸ்தான கவர்ன்மெண்டாருடன் கலந்து வேலை செய்வதால் பலத்த நன்மை உண்டாகுமென்று நினைக்கிறேன். பொருளாதார விருத்தியைப் பலப்படுத்தும்படியான சில ஏற்பாடுகளை ஆராய்ந்து ஏற்கனவே செய்திருக்கிறது.

இருப்புப்பாதையும் ஜலப்பாய்ச்சலும்

இப்போது கட்டப்பட்டு வரும் கானம்பாடி ரிசர்வாயர் (ஜலத் தேக்கம்) கோலார் தங்கச் சுரங்கங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யும் உற்பத்தி ஸ்தலமாக விருப்பதுடன் காவேரி ஜலப் பாய்ச்சலையும் பாதுகாத்து வரும். இத்துடன் கூட அந்தப் பிராந்தியத்தையும் ஷெடி படுகையையும் உலகத்திலுள்ள மகா பெரிய ஏரிகளில் ஒன்று மாதிரியாகச் செய்து போடும். வெகு காலமாக சமஸ்தானத்தில் ரயில் போக்குவரத்து விசாலப்படுத்தப்படவில்லை. சமஸ்தானத்திற்துள்ளவே ரயில் போக்குவரத்துகளை விருத்தி செய்ய வேண்டுமென்றும் சமஸ்தானததைச் சுற்றிலுமுள்ள பிரிடிஷ் ராஜ்ஜியத்தின் முக்கியமான இருப்புப்பாதைகளுடன் சேர்க்க வேண்டுமென்றும் அப்படிச் செய்வது அவசியமென்று நாங்கள் உணர்ந்திருக்கிறோம். உங்களுடைய மேன்மை பொருந்திய கவர்ன்மெண்டு எங்களுடைய இருப்புப்பாதை ஏற்பாட்டில் அனுதாபம் காட்டி பிரிடிஷ் ராஜ்ஜியத்தின் ரயில் பாதைகளுடன் எங்களுடைய சமஸ்தான இருப்புப் பாதைகளைச் சேர்க்கவேண்டுமென்கிற எங்களுடைய அபிப்பிராயத்தை ஆதரிக்க வேண்டும்.

இப்படி விருத்தி செய்யப்பட்டிருப்பதை நான் எடுத்துச் சொல்லியிருப்பதற்குக்காரணம் என்னவென்றால் பிரிடிஷ் கமிஷனால் 42 வருஷங்களுக்கு முந்தி எங்களுக்கு கொடுக்கப்பட்ட சமஸ்தானத்தின் ஜனங்களுடைய நன்மைக்காக உழைக்காமலில்லையென்றும் எங்களால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்து வருகிறோம் என்பதை காண்பிக்கும்பொருட்டும் பிரிடிஷ் சிம்மாசனத்தில் நாங்கள் வைத்திருக்கும் ராஜ விசுவாசத்தைக் காண்பிக்கும் பொருட்டும் பிரிடிஷ் ஆக்ஷியின் நன்மையை நாங்கள் சிலாகிக்கிறோம் என்பதையும், சுதேச ராஜாங்கங்களிடம் தங்களுடைய கவர்ன்மெண்டு, அனுதாபம்காட்டி ஆக்ஷி செலுத்திவருவதையும் நாங்கள் உணர்ந்து சிலாகிக்கிறோம் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கும் பொருட்டே அப்படிச் சொல்லியிருக்கிறேன்

மேன்மை தங்கிய வைஸிராய் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பதில்.

தங்களை சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து பட்டாபிஷேகம் நடத்திவைக்கும்பொருட்டு 10 வருஷங்களுக்கு முந்தி லார்ட் கர்ஜன் இந்த சமஸ்தானத்திற்கு வந்தபோது உங்களுக்கு முன்னால் இருக்கப்பட்ட கீர்த்தியான சமயங்களை எடுத்துப்பேசினார். இன்றையதினம் நான் சுற்றிலும் பார்த்ததால் அந்த சமயங்கள் எல்லாம் உங்களுக்கு நன்மையாய் முடிந்திருக்கின்றன. எங்கு பார்த்தாலும் நல்ல பரிபாலனத்தின் சின்னங்களாகிய சன்மார்க்க விருத்தியும் பொருளாதார விருத்தியும் பலப்பட்டு வருகின்றனவென்று தெளிவாய்த் தெரிகின்றது. இந்த சமஸ்தானத்தில் ஏராளமான இயற்கை பொருளாதாரங்கள் அமைந்திருக்கின்றன. அவைகள் மனிதனுடைய சாமர்த்தியத்தாலும் புத்தி கூர்மையாலும் சமஸ்தானத்தின் பிரஜைகளுடைய நன்மைக்காகப் பிரயோகப்படுத்தப் படுகின்றன. மின்சார வல்லமையின் ஆச்சரியமான விருத்தியையும் ஜெயத்தையும் பற்றி எல்லோருக்கும் தெரியுமானபடியால் நான் எடுத்துச் சொல்ல வேண்டிய தனாவசியம் ஆனால் ஒருசமாசாரம் மட்டிலும் இப்போது கேள்விப்பட்டேன். அது எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. மின்சாரம் உற்பத்திக்காக போட்

டமுதலை அசல் லாபம் மூலியமாக எடுத்துப் போட்டீர்கள் என்றும் சென்ற வருடத்தில் மட்டிலும் மின்சார சர்க்கார் கட்டண மூலியமாக 16 லக்ஷம் தங்களுடைய கவர்ன் மெண்டிற்கு வந்திருக்கிறதென்று கேள்விப் பட்டு சந்தோஷமடைகிறேன். உங்களுடைய சமஸ்தானத்தில் சாகுபடி செய்யும்படியான நிலங்கள் ஏதேஷ்டமாயிருக்கின்றன. ஆதலால் எல்லாரும் நினைப்பது போல நீர்ப்பாய்ச்சலையும் போக்கு வரத்துக்களையும் பலப்படுத்துவதில் உங்களுடைய கவர்ன்மெண்டு கனத்த கவனமும் கவலையும் செலுத்தி வருகின்றது. உதாரணமாக காவேரி மின்சார சக்தி ஏற்ப்பாட்டைச் சொல்லுவேன். அது நீர் பாய்ச்சல் ஸ்தலங்களை விசாலப் படுத்தியிருப்பது மன்றி மின்சார வல்லமையையும் அதிகரிக்கின்றது; காவேரியின ஜல சம்பந்தமாக இப்போது மைசூர் கவர்ன் மெண்டிற்கும் சென்னப் பட்டண கவர்ன் மெண்டிற்கும் நடந்துவரும் மத்தியஸ்தம் இரு தரப்பாருக்கும் திருப்திகரமாக முடியுமென்று நான்நம்புகிறேன். அவர் அவர்கள் விரும்புகிறபடி எல்லா ஜலத்தையும் உபயோகப் படுத்திக் கொள்வது சாத்தியமான காரியமாகாமற் போன போதிலும், மத்தியஸ்தர் தீர்மானம் நியாயமானதாயிருந்து இந்த கஷ்டமான பிரஸ்னையை முடிவு படுத்திவிடுமென்று நம்புகின்றேன்.

SHIPPING REPORT.

ஸ்டீமர் ரிப்போர்ட்.

சென்னைத் துறைமுகத்திற்கு வந்துபோகும் ஸ்டீமர்கள்.

	வருகை.					புறப்பாடு.
	பெயர்.	எஜண்டுகள்.	எத்தேசமிருந்து வருகிறது.	தேதி.		எந்த ஊருக்குப் போகிறது.
				1913		
1	லயிட்னில்	பின்னி	பம்பாய்	நவம்.	17	கல்கத்தா
2	டரோபா	,,	ஸ்டிரேயிட்ஸ்	...	17	ஸ்டிரேயிட்ஸ்
3	ஸின்கிளேர்	கார்டன் வுட்ராப்	லிவர்ப்பூல்	...	18	கல்கத்தா
4	நியுயன்பெல்ஸ்	,,	மெல்போர்ன்	...	18	கல்கத்தா
5	சுபேதார்	பின்னி	கல்கத்தா	...	18	பம்பாய்
6	வொயிடன்பல்ஸ்	கார்டன் வுட்ராப்	ஆன்ட்வர்ப	...	21	கல்கத்தா
7	ஆல்ப்பயின்	,,	கோஸ்ட்	...	21	லண்டன்
8	பீகம்	வில்ஸன்	கோஸ்ட்	...	21	கல்கத்தா
9	டிரீஸ்ட்	வால்காட் பிரதர்ஸ்	டிரீஸ்ட்	...	22	ரங்கூன்
10	நிவாசா	பின்னி	கல்கத்தா	...	25	லண்டன்
11	டானஸ்பல்ஸ்	கார்டன் வுட்ராப்	ஆன்ட்வெர்ப்	...	26	கல்கத்தா
12	கிராஸ்டாபெல்ஸ்	,,	யம்பரோ	...	26	கல்கத்தா
13	யுருஹார்ட்	,,	லிவர்ப்பூல்	டிசம்	1	கல்கத்தா
14	யும்டாலி	பாரி	கல்கத்தா	...	4	நேட்டால்